[illegible]

V 5. No 43 3 Nov 1932


3L
[illegible]211, N 28 KN
N32.5.43
188978

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 5] 1932 ௵ நவம்பர் ௴ 3உ [No. 43


பொருளடக்கம்.


1. தலையங்கம் (Leader) 841
2. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - கலிதொடர்காண்டம் 843
3. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 1-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L., 845
4. அப்பர் (64 கலைகள்—தர்க்கம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 847
5. குடிவாழ்க்கை (Plato's Republic) K. இராஜகோபால் 849
6. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 5. களம் 3) ஷேக்ஸ்பியர் நாடகம் 851
7. செஞ்சிக்கோட்டையின் அழிவு T. A. கனகசபாபதி 852
8. பொதிகைநிகண்டு (ஒரு சொற் பல்பொருட் பெயர்த் தொகுதி) S. வையாபுரிப் பிள்ளை B.A. B.L. 854
9. சொல்லாடாட்டம் 11. 856
10. வர்த்தமானம் 859


## கலாநிலயம்

### அறிவில்லாத் திறமை.

திறமையையே அறிவென்று திகைக்க வேண்டா. சிலந்தியின் வலையிலும் தேன்கூண்டிலும் அளப்பரிய வியப்பிற்கிடனாய திறமை மிக அமைந்திருக்கக் காண்கின்றோம். ஆயினும், அறிவினது ஆட்சியால் ஆனவைக ளல்ல அவை. சிலந்தியும் தேனீயும் சிந்தித்துப் பயின்றதின்றி இயற்கையாய் எய்திய இந்தத் திறமையை அவைகளின் அறிவென்று ஒருவரும் மயங்கமாட்டார். மனிதனது திறமையோ வேறுவிதமாக மதிக்கப்படுகின்றது. மனது வாக்கு காயம் ஆகிய தன் கரணங்களைப் பலவிதப் பயிற்சிகளுக்குள்ளாக்கி, எந்திர தந்திர சூழ்ச்சிகளாகவும், சொல்வன்மையாகவும், தொழிற் சிறப்பாகவும் மனிதன் காட்டுகின்ற திறமைகளைப் பொதுஜனங்கள் அறிவின் தோற்றமெனப்பாவித்து விவகரிக்கின்றனர். மற்று இதுவோ அறிவன்று. இதனை அறிவென்று எண்ணுவதால் விளைகின்ற கேட்டிற்கோ அளவில்லை. பயிலாமற் சிலந்தியும் பயின்று மனிதரும் பெறலாயதன்றி இவ்விரு திறமைகளுக்கிடையே வேறு வேற்றுமையில்லை. என்ன சூழ்ச்சி இதுகாண், என ஈரிடத்தும் வியந்தால் வியக்கலாமே யொழிய 'என்ன அறிவு' என்று ஓரிடத்தும் உவப்பதுவோ அமையாது. சிலந்திக்கில்லாததும் மனிதனுக்கிருக்கக்கூடியதுமான அறிவின் செய்தி யாதெனத் தெளிந்தக்கால் திறமையின்கரவு வெளிப்பட்டதாகும்.

இச்சையால் இயக்கப்படுவது இவ்வுலகம். புல்முதல் மனிதன் ஈறுப எல்லாப் பிராணிகளும் இச்சையால் இயக்கப்பெற்று இருப்பனவேயன்றி அறிவினால் ஆளப்பெற்று வாழ்வனவல்ல. இவ்விச்சைகளின் தோற்றம் பலப்பலவாயினும், அத்தோற்றங்களினிடையே துருவிச்சென்று ஆராயுங்கால், அனைத்திற்கும் மூலமாய் இருப்பது, உயிருடன் இருக்கவேண்டும் என்னுமோர் இச்சையே யாவது புலப்படும். ஒரு இச்சையின் தன்மை, அதனால் வெளிப்படும் செய்கையைக்கொண்டு தெரிந்துகொள்ளற் குரியதாய் நிற்கின்றது. தாவரங்களும் மற்றப் பிராணிகளும் தாம் சாகாமல் இருப்பதற்குச்செய்கின்ற கருமங்களன்றி அயலொன்றும் முயல்வனவாகத் தெரியவில்லை. பொதுவில் மனிதன் செய்தியும் அத்தகையதேயாம். விலங்குகளுக்கு இல்லாத பகுத்தறிவென்பதொன்று மனிதனுக்கு இருக்க நேர்வதால், இம்மனிதனுடைய காரியங்கள் பல்வேறு வகைப்பட்டனவாய், அறிவினால் ஆளப்பெறுவன போல் மேற்பார்வைக்குத் தோன்றுவதைக் கண்டு மயங்கிவிடலாகாது. சிறு புல்லும் ஆலமரமும் சிலந்தியும் வண்டும் யானையும் மனிதனும், யாரும் யாவையும் 'இருக்கவேண்டும்' என்னும் இவ்விச்சைக்கு இணங்கிய சிற்சில திறமைகளை இயற்கையாகவேனும் பயிற்சியாலேனும் பெறுகின்றன. சிலந்தியின் வலையும் தேனீயின் கூண்டும் அவ்விச்சையை நிறைவேற்றிக்கொள்கின்ற திறமைகளே. மனிதனல்லாத பிராணிகளிடத்தில் இம் மூலஇச்சை பல்வேறு பிரிவுகளாய்ப் பிளவுபடாமல் பெரும்பாலும் ஒன்றேயாய் நின்று, ஒரேவகைத் திறமையால் நிறைவேற்ற முயலப் பெறுகின்றது. மனித இனத்திலோ, இவ்விச்சையுடன் அறி

வென்னும் ஒருசக்தி கலந்துகொண்டு அதனைப் பற் பலவகைகளில் மாற்றி அவ்வவ் வகைக்குரிய திறமையும் வேறுவேறுபோல் தோன்றும்படி செய்கின்றது. இதனை அறிவின் திறம்என அழைக்கப்புகுவது பிழை; இச்சையானது அறிவையும் தனக்கு ஆள்செய்யும்படி அடக்கிக்கொள்கின்ற திறமையையே இதனிற் பெரும்பான்மை காண்கின்றோம். இச்சையென்பது மனிதனுக்கும் பிராணிகளுக்கும் ஒன்றே. தன் இச்சையைச்செலுத்தும் முறைமை தக்கதென்றும் தகாதென்றும் காரணங்கள் கற்பித்துக் காட்டும் சூழ்ச்சி மற்றப் பிராணிகளுக்கில்லை, மனிதனுக்கே இருக்கின்றது. ஈதுணராமல் மக்கள் தாம் இச்சையால் வேண்டுவதொன்றை வேறு காரணங்களைக்கொண்டு வேண்டுவதாக எண்ணி மோசம்போகின்றனர். ஓரே இச்சையானது வேறுவேறு ஆவனபோல் பல வகைகளில் கிளைகளாகப்பிரிந்து மனிதனில் தோன்றுகின்றதெனக் கூறினேம். இப்பிரிவினில் யாதாவதொன்றனுள் அடங்கக்கூடிய ஒரு விடயத்தை மனிதன் வேண்டும்போது, அது ஏன் தனக்கு வேண்டுமென்றகாரணங்களை முதலில் சிந்தித்து அறிந்துகொண்டு பிறகுஅதனை வேண்டுகின்றானலன். காரணங்கள்கொண்டு ஒன்று வேண்டுவதுபோல்தோன்றுவதெல்லாம் வெளித்தோற்றமே; பிழையோ இது பெரிதுடைத்து. உண்மையில் நிகழ்வது இதற்கு மறுதலையா யிருக்கின்றது. ஒன்றினை வேண்டுவதே முதற்செய்தியாக, பிறகு, அது ஏன் வேண்டுமென்பதற்குக் காரணங்கள் கற்பிக்கப்புகுவதே மானுடமனத்தின் நிகழ்ச்சிமுறை இரகசியமாம். தற்காலம் நெடிது வாதாடப்பெறும் இந்த "வோட்டின்" திறத்தில் (Vote) இதற்குரிய உதாரணம் ஒன்று காணலாம். தனக்கு ஓர் 'வோட்' வேண்டுமென்கின்றான் மனிதன். எதற்குஇவ் 'வோட்' வேண்டப்படுகின்றதென்கின்ற காரணங்களை யெல்லாம் கண்டு தெளிந்து இதனைவேண்டுகின்றான் என்று இயம்ப இயலாது. வோட் வேண்டும் என்னும் வேட்கை முதலில் உறுதியாக, பிறகு அது இன்றியமையாததென்பதற்கு எண்ணிறந்த காரணங்கள் கற்பித்துக் கழறப் புகுகின்றான். இவ்வண்ணம், மனிதர், அனைத்திற்கும் ஆதியாகிய தம் இச்சையை மறைத்து அதனை அறிவுபோல் காட்டுவதற்கே எத்தனையோ சித்தாந்தங்களும் சமயக்கோட்பாடுகளும் சமைக்க நேர்கின்றனர்.

உணவிற்கும் மணத்திற்கும் மக்கட்பேற்றிற்கும் மனிதர் படாதபாடு படுகின்றனர். இது சிந்தனையின் காரியமா யிருத்தற்கியலுமோ? ஒருபோதும் இயலாதென ஷோபன்ஹார் அனைய பேரறிஞர் சிலர் கருதியிருக்கின்றனர். ஒன்றினை வேண்டி மனிதர் தாமே தொடர்ந்துசெல்வதுபோல் தோன்றுவதனைத்தும் பொய்; உண்மையில் இவர் பின்னிருந்தே தள்ளப்படுகின்றனர். தாம் பார்க்கின்றவைகளால் நடத்தப்படுவதாய் என்னுவதற்கு எதிராக, தம்முடைய இச்சையினால் துரத்தப்படுவதே உண்மை என்பதை உணர்ந்துகொள்ளல் வேண்டும். ஆதலின், ஐம்புலன்களின் அறிவும் பகுத்தறிவும் யாவும் மனிதனுடைய இச்சைக்குக் குற்றேவல் செய்வதல்லால் பெரும்பான்மை அதற்கு வேறொன்றும் தனித்த வேலையாயமைவது அருமை. மாறுதலடையாமல் நிரந்தரமாயிருக்கும் மனத்தின் அம்சம் இச்சை என்னும் இவ்வொன்றே. இறவாமல் நிறைந்துமிருக்கவேண்டும் என்னும் இச்சையே அனைத்திற்கும் காரணமாகின்றது. இந்த இச்சையை மாத்திரம் நிறைவேற்றும் பொருட்டுப் பயிலப்படுவதுஎதுவேயாயினும் அதுதான் திறமையின்பாற்படுமன்றி அறிவோ ஆகாது. அந்த இச்சையை அடக்கி ஆட்சிகொள்ள முயல்கின்ற அம்சங்கள்தாம்அறிவென்று அழைத்தற்குரியதாகின்றன. அல்லது, இச்சையுடன் இணங்காதஅறிவே, திறமை எனத் தகுந்ததாகாமல், மெய்யான அறிவாகும் என்று உரைக்கலாம்.

ஈறில்லா இச்சையினால் இயங்கியவண்ணமா யிருக்கும் இவ்வாழ்க்கை கரைசெயற்கரிய துன்பக் கடலேயாய்த் தீராமல் மற்றென்செய்யும்! இதனின்று வெளிவருவதெங்ஙனம்? தொலைபாத இவ்விச்சையைக் கடந்துய்யும் நெறி யொன்றே. அது யாதெனில், இச்சைக்கு அடிமைசெய்யும் திறமையை வியக்காமல், அவ்விச்சையையும் அதன் தன்மையையும் ஆராய்ந்தறிதற்குரிய சிந்தனைகளைப் பயில்வதேயாகும். எல்லாத்தேயங்களிலும் எல்லாக்காலங்களிலும் வாழ்ந்திருந்த சான்றோர், என் நினைத்தார் என் செய்தார் என்பதைச் சிந்தித்து அறிந்துகொள்வது இச்சைக்கடலிலிருந்து கரையேறக் கைதந்துதவுமென்பதிலையமில்லை. இச்சையால் இயங்கும் இவ்வுலகின் குற்றங்களுக்கும் துன்பங்களுக்கும் மேலாக, இச்சையை ஆராய்ந்து கடந்த பெரியோர்தம் அறிவானது நன்மணம்போல் கமழ்ந்தெழுகின்றது. மனிதரிற் பெரும்பாலோர் தாம் காண்பனவெல்லாம், தம்முடைய இச்சைக்கு இலக்காகிய பொருள்களென்றே நினைத்து விவகரிக்கின்றனர் — அவர்படும் துன்பத்திற்கெல்லாம் காரணம் இதுவே. அனுபவிக்க வேண்டியன என்னும் இச்சைநீங்கி, அறிந்துகொள்ளப்படுவதற்கு மட்டுமே இலக்காகி இருப்பனவாம் பொருள்களெனும் எண்ணமும் பயிற்சியுங் கைகூடக் கைகூடத் துன்பக்கடலி லிருந்தெழுந்து விடுதலை என்னுங் கரையை அடைகின்ற தன்மையர்களாவோம்.

எனின் இச்சைக் கிணங்கிய திறமையானது, அவ்விச்சைக்கு அயலாய் நின்று அவ்விச்சையையே ஆராயப்புகுகின்ற அறிவினின்று முற்றிலும் வேறுபட்டதொன்றென்பதைச் செவ்விதின் தெளிந்துகொள்ளலாம். ஒரு பொருளினைக் காணுங்கால், ஒரு விடயத்தைப் பற்றிச் சிந்திக்குங்கால், அப்பொருள் அல்லது அவ்விடயம் தனக்கு என்ன தரும் என்ற பான்மைபோக்கித் தன்னுடைய நினைவு கலவாமல் அப்பொருள் அல்லது அவ்விடயத்தையே கொண்டளந்து அதனை அறிகின்றவோர் பயிற்சியே எல்லா நன்மைகளுக்கும் ஆதாரமாகின்றது. திரண்டு சிவந்த கனிகள் நிறைந்ததோர் மாமரத்தைக்கண்டவொருவன், அக்கனிகளைத் தான் தின்றும் விற்றுப் பணமாக்கியும் அனுபவிக்க வேண்டுமெனும் எண்ணமுடையவனாவானாயின் அது இச்சையால் இயக்கப்பெறும் ஓர் இழிந்த நிலை. தன்னையும் அத்தீங்கனியையும் இவ்வண்ணம் இச்சையால் பிணித்துவைத்துப் பிறகு அக்கனியைக் கல்லாலெறிந்தோ கோலாலடித்தோ, மரத்தின்மீ தேறியோ அடையமுயல்வதனைத்தும் அவ்விச்சைக்குத் தொண்டு செய்கின்ற திறமையின் தோற்றங்களாம். மாங்கனியைப் பறிப்பதுமுதல் ஆகாய விமானங்கள் அமைக்கின்றதளவும் இந்தத் திறமையே கையாளப்பெறுகின்றது. மற்று, "இம்மாங்கனியைக் கண்டவுடன், எனது இச்சை ஏன் என்னை அதன் பால் தூண்டுகின்றது," என்று தன் இச்சையைச் சோதிக்கப் புகுமிடத்தும், அல்லது, "ஏற்றுக்கோ இம்மரம் இப்படிக் கனிகளை ஈன்றிருக்கின்றது. அதற்கோர் ஆன்மா உளதாயின் அவ்வான்ம உவகையினை இவ்வண்ணம் வெளிப்படுத்துகின்றதோ......மாமுங் கனியும் குயிலும் கிளியும், மாலைக் கதிரோன் தன் செங்கரங்களால் இவைகளைத் தழுவிக்கொண்டு, விட்டுப் பிரிய மனமிலான்போல் அந்திவானத்தில் தயங்கி நிற்பதும், யார் செயலோ, எவர்புகழோ!......" என்பது அனைய சிந்தனைகளுக்கிடையே மூழ்குகின்ற இடத்தும், இச்சையற்ற அறிவு பிறக்கத்தலைப்படுகின்றது. பொருள்கள் தன்னுடைய கருத்துக்கு இடமாக எண்ணப்படுங்கால் அறிவின் விளக்கமும், தன்னுடைய தொடர்பிற்குத் தூண்டுதல்களாகக் கொள்ளப்படுங்கால் இச்சையின் இபக்கமு[illegible] திறமையுந் தோன்றுகின்றன.

# தமிழ்ப் பாடம் 43.

## நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[825-வது பக்கத் தொடர்ச்சி]

வெய்ய தரையென்னு மெல்லமளி யைத்தடவிக்
கையரிக்கொண் டெவ்விடத்துங் காணமல்-ஐயகோ
என்னப்போய் வீழ்ந்தா ளினமேதி மென்கரும்பைத்
தின்னப்போ நாடன் திரு. 109.

பொழிப்புரை:—எருமைக் கூட்டங்கள் மெல்லிய கரும்பைத் தின்பதற்கு நாடிப்போகும் விதர்ப்பநாட்டரசனது இலக்குமியனைய மகள், கொடிய தரையாகிய அம்மெல்லிய படுக்கையைத் தடவித்தேடி எவ்விடத்தும் நளனைக் காணமல் 'ஐயோ' வென்று அரற்றிப்போய் விழுந்தாள்.

குறிப்பு:—கடினமான தரையை மெல் அமளி என்றது வஞ்சப்புகழ்ச்சிபோல் வந்ததாம்.

———

அழல்வெஞ் சிலைவேட னம்புருவ வாற்ரு
தழலுங் களிமயில்போ லோடிக்—குழல்வண்
டெழுந்தோட வீழ்ந்தா ளிருகுழைமேற் கண்ணீர்க்
கொழுந்தோட வீமன் கொடி. 110.

பொழிப்புரை:—களித்திருந்த ஒரு மயிலின்மீது கொடிய வில்லையுடைய வேடனது நெருப்புப் போன்ற அம்பு பாய, அம்மயில் பொறுக்காமல் உழல்வதைப் போல் வீமன்மகள், கூந்தலில் மொய்த்திருந்த வண்டுகள் பறந்தோட ஓடி, இரண்டு குழைகளின்மீதும் அவள் கண்ணீர்த் தாரை பாய, விழுந்தாள்.

———

வான்முகிலு மின்னும் வறுநிலத்து வீழ்ந்ததுபோல்
தானுங் குழலுந் தனிவீழ்ந்தாள்—ஏனம்
குளம்பான் மணிகிளைக்குங் குண்டுநீர் நாடன்
இளம்பாவை கைத்தலைமே லிட்டு. 111.

பதப்பிரிவு:—வான் முகில்உம் மின்உம் வறு நிலத்து வீழ்ந்ததுபோல் தானும் குழலும் தனி வீழ்ந்தாள் ஏனம் குளம்பால் மணி கிளைக்கும் குண்டு நீர் நாடன் இளம் பாவை கை தலைமேல் இட்டு.

அன்வயம்:-ஏனம் குளம்பால் மணிகிளைக்கும் குண்டு நீர் நாடன் இளம்பாவை, கைத் தலைமேல் இட்டு, வான் முகிலும் மின்னும் வறுநிலத்து வீழ்ந்தது போல், தானும் குழலும் தனி வீழ்ந்தாள்.

பதவுரை.

ஏனம்-பன்றிகள் (கிழங்கிற்கு நிலத்தைக் கிண்டும் போது)
குளம்பால் - குளம்பினால்
மணி - இரத்தினங்களை
கிளைக்கும் - தோண்டுகின்ற (செல்வமும்)
குண்டு - ஆழமான
நீர் - நீர் நிலைகளின் வளப்பமும் பொருந்திய
நாடன் - விதர்ப்பநாட்டு அரசனுடைய
இளம் - இளமையான
பாவை - பதுமைபோன்ற பெண்,
கை - தன் கைகளை
தலை மேல் - தலையின்மீது
இட்டு - வைத்து,
வான் - ஆகாயத்திலுள்ள
முகிலும் - கருமேகமும்
மின்னும் மின்னலும்
வறு - வெறுமையான
நிலத்து - தரையில்
வீழ்ந்ததுபோல் - விழுந்ததுபோல
தானும் - அவளும்
குழலும் - கூந்தலும்
தனி - நிகரில்லாததோர் இரக்கத்திற் கிடமாய்
வீழ்ந்தாள் - விழுந்தாள்.

விரிவுரை:—தமயந்தி மின்னற்கொடி போன்றும் அவள் கூந்தல் மேகம்போன்றும் இருத்தலால், அவள் கூந்தல்விரிந்த கோலத்தோடு தரையில் விழுந்ததற்கு நிகராகச்சொல்லக்கூடியது இயற்கையில் ஒன்றுமில்லை. ஆதலால், ஆகாயத்தில் இருக்கின்ற கருமேகம் ஒன்று மின்னலோடேகூடத் தரையில்வந்து விழுமானல் அந்தத் தோற்றம் எவ்வாறு இருக்குமோ அவ்வாறே இருந்தது தமயந்தி விழுந்தது என்னலாம். ஆனல், மேகம் மின்னிமின்னித் தரையில் வந்து விழுவது ஒருபோதும் நேராது. இப்படி நேராத செயலையேனும் இல்லாத பொருளையேனும் உவமையாய்க் கூறினல் அது இல்பொருள் உவமை அணி ஆகும். இல்லாத விஷயத்தை உவமையாகக் கூறுவதால் இந்த அணிக்கு இப்பெயர் வந்தது.'மலை நடந்ததென நடந்தான்,' என்பதும் நேராத செயலை உவமையாய்க் கொள்வதால், இல்பொரு ளுவமையணி. "குமுதமே பேசிற்றென்ன இவள் பேசினள்," என்பதும் ஒருபோதும் நேராதவொன்றை உவமையாய்க் கூறுவதாம். பாற்கடலில், "கரிய மால்வரை முளரிக் காடு ஈன்று கிடந்தாங்கு" திருமால் பள்ளிகொண்டிருந்தாரெனப் பிள்ளைபெருமாள் ஐயங்கார் வருணிக்கின்ருர். தாமரைக் காடு பூத்திருந்த ஒரு பெரிய மலை, கடலில் படுத்திருந்தது போல் படுத்திருந்தார் என்பது பொருள். கரிய உருவத்தால் மலை திருமாலுக்கு ஒப்பாயது. திருமாலின் இருகண்கள் இதழ்கள் அகங்கை நாபி பாதம் இவை தாமரையை நிகர்ப்பன. தாமரைபோன்ற இவை தன்பால் விளங்கக் கடலில் நெடுமால் படுத்திருப்பதைத் தாமரைபூத்தமலை, கடலில் மிதப்பதற்கு நேராகக் கூறுகின்ருர். மலையில் தாமரை பூக்காது. மலை கடலில் மிதக்கவும் மிதக்காது. அப்படி மலையிலும் தாமரை பூத்து அம்மலையும் கடலில் மிதக்கவும் நேருமானல் அத்தோற்றம் எப்படியிருக்குமோ அப்படியே இருந்தது திருமாலின் தோற்றம் என்று, ஒருபோதும் நேரக் கூடாததை நேர்வதாகக் கற்பித்து உவமை ஆக்கினமையால் இது இல்பொருளுவமை. சரம் பட்டுச் சாய்ந்திருந்த வாலியின்முன் வில்லும் கையுமாய் இராமன் வருவதைக் கம்பர், "நீலக் கார்முகில் கமலம் பூத்து மண்ணுற்று வரிவில் ஏந்தி வருவதேபோல வந்தான்" என்பர். மேகத்தில் தாமரை பூக்காது; மேகம் வில்லொன்று ஏந்தித் தரையிலே நடந்துவாராது. வருமாயின் அது இராமன் வந்ததற்கு நிகர். ஆதலின் இல் பொருள் உவமை.

மேல்காட்டிய உதாரணங்களில், மலை மேகம் தாமரை வில் மின்னல் முதலிய பொருள்கள் உண்டு. ஆதலால், இல்பொருள் உவமை என்று எப்படிக் கூறலாம் என்னும் ஐயம் வேண்டா. மலையிலும் மேகத்தி

# தமிழ்ப் பாடம் 43.

## நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[825-வது பக்கத் தொடர்ச்சி]

வெய்ய தரையென்னு மெல்லமளி பைத்தடவிக்
கைபரிக்கொண் டெவ்விடத்துங் காணமல்-ஐயகோ
என்னப்போய் வீழ்ந்தா ளினமேதி மென்கரும்பைத்
தின்னப்போ நாடன் திரு. 109.

பொழிப்புரை:—எருமைக் கூட்டங்கள் மெல்லிய கரும்பைத் தின்பதற்கு நாடிப்போகும் விதர்ப்பநாட்டரசனது இலக்குமியனைய மகள், கொடிய தரையாகிய அம்மெல்லிய படுக்கையைத் தடவித்தேடி எவ்விடத்தும் நளனைக் காணமல் 'ஐயோ' வென்று அரற்றிப்போய் விழுந்தாள்.

குறிப்பு:—கடினமான தரையை மெல் அமளி என்றது வஞ்சப்புகழ்ச்சிபோல் வந்ததாம்.

---

அழல்வெஞ் சிலைவேட னம்புருவ வாற்று
துழலுங் களிமயில்போ லோடிக்—குழல்வண்
டெழுந்தோட வீழ்ந்தா ளிரு குழைமேற் கண்ணீர்க்
கொழுந்தோட வீமன் கொடி. 110.

பொழிப்புரை:—களித்திருந்த ஒரு மயிலின்மீது கொடிய வில்லையுடைய வேடனது நெருப்புப் போன்ற அம்பு பாய, அம்மயில் பொறுக்காமல் உழல்வதைப் போல் வீமன்மகள், கூந்தலில் மொய்த்திருந்த வண்டுகள் பறந்தோட ஓடி, இரண்டு குழைகளின்மீதும் அவள் கண்ணீர்த் தாரை பாய, விழுந்தாள்.

---

வான்முகிலு மின்னும் வறுநிலத்து வீழ்ந்ததுபோல்
தானுங் குழலுந் தனிவீழ்ந்தாள்—ஏனம்
குளம்பான் மணிகிளைக்குங் குண்டுநீர் நாடன்
இளம்பாவை கைத்தலைமே லிட்டு. 111.

பதப்பிரிவு:—வான் முகில்உம் மின்உம் வறு நிலத்து வீழ்ந்ததுபோல் தானும் குழலும் தனி வீழ்ந்தாள் ஏனம் குளம்பால் மணி கிளைக்கும் குண்டு நீர் நாடன் இளம் பாவை கை தலைமேல் இட்டு.

அன்வயம்:-ஏனம் குளம்பால் மணிகிளைக்கும் குண்டு நீர் நாடன் இளம்பாவை, கைத் தலைமேல் இட்டு, வான் முகிலும் மின்னும் வறுநிலத்து வீழ்ந்தது போல், தானும் குழலும் தனி வீழ்ந்தாள்.

பதவுரை.

ஏனம்-பன்றிகள் (கிழங்கிற்கு நிலத்தைக் கிண்டும் போது)
குளம்பால் - குளம்பினால்
மணி - இரத்தினங்களை
கிளைக்கும் - தோண்டுகின்ற (செல்வமும்)
குண்டு - ஆழமான
நீர் - நீர் நிலைகளின் வளப்பமும் பொருந்திய
நாடன் - விதர்ப்பநாட்டு அரசனுடைய
இளம் - இளமையான
பாவை - பதுமைபோன்ற பெண்,
கை - தன் கைகளை
தலை மேல் - தலையின்மீது
இட்டு - வைத்து,
வான் - ஆகாயத்திலுள்ள
முகிலும் - கருமேகமும்
மின்னும் மின்னலும்
வறு - வெறுமையான
நிலத்து - தரையில்
வீழ்ந்ததுபோல் - விழுந்ததுபோல
தானும் - அவளும்
குழலும் - கூந்தலும்
தனி - நிகரில்லாததோர் இரக்கத்திற் கிடமாய்
வீழ்ந்தாள் - விழுந்தாள்.

விரிவுரை:—தமயந்தி மின்னற்கொடி போன்றும் அவள் கூந்தல் மேகம்போன்றும் இருத்தலால், அவள் கூந்தல்விரிந்த கோலத்தோடு தரையில் விழுந்ததற்கு நிகராகச்சொல்லக்கூடியது இயற்கையில் ஒன்றுமில்லை. ஆதலால், ஆகாயத்தில் இருக்கின்ற கருமேகம் ஒன்று மின்னலோடேகூடத் தரையில்வந்து விழுமானல் அந்தத் தோற்றம் எவ்வாறு இருக்குமோ அவ்வாறே இருந்தது தமயந்தி விழுந்தது என்னலாம். ஆனல், மேகம் மின்னிமின்னித் தரையில் வந்து விழுவது ஒருபோதும் நேராது. இப்படி நேராத செயலையேனும் இல்லாத பொருளையேனும் உவமையாய்க் கூறினல் அது இல்பொருள் உவமை அணி ஆகும். இல்லாத விஷயத்தை உவமையாகக் கூறுவதால் இந்த அணிக்கு இப்பெயர் வந்தது. 'மலை நடந்ததென நடந்தான்,' என்பதும் நேராத செயலை உவமையாய்க் கொள்வதால், இல்பொரு ளுவமையணி. "குமுதமே பேசிற்றென்ன இவள் பேசினள்," என்பதும் ஒருபோதும் நேராதவொன்றை உவமையாய்க் கூறுவதாம். பாற்கடலில், "கரிய மால்வரை முளரிக் காடு ஈன்று கிடந்தாங்கு" திருமால் பள்ளிகொண்டிருந்தாரெனப் பிள்ளை பெருமாள் ஐயங்கார் வருணிக்கின்றார். தாமரைக் காடு பூத்திருந்த ஒரு பெரிய மலை, கடலில் படுத்திருந்தது போல் படுத்திருந்தார் என்பது பொருள். கரிய உருவத்தால் மலை திருமாலுக்கு ஒப்பாயது. திருமாலின் இருகண்கள் இதழ்கள் அகங்கை நாபி பாதம் இவை தாமரையை நிகர்ப்பன. தாமரைபோன்ற இவை தன்பால் விளங்கக் கடலில் நெடுமால் படுத்திருப்பதைத் தாமரைபூத்தமலை, கடலில் மிதப்பதற்கு நேராகக் கூறுகின்றார். மலையில் தாமரை பூக்காது. மலை கடலில் மிதக்கவும் மிதக்காது. அப்படி மலையிலும் தாமரை பூத்து அம்மலையும் கடலில் மிதக்கவும் நேருமானல் அத்தோற்றம் எப்படியிருக்குமோ அப்படியே இருந்தது திருமாலின் தோற்றம் என்று, ஒருபோதும் நேரக் கூடாததை நேர்வதாகக் கற்பித்து உவமை ஆக்கினமையால் இது இல்பொருளுவமை. சரம் பட்டுச் சாய்ந்திருந்த வாலியின்முன் வில்லும் கையுமாய் இராமன் வருவதைக் கம்பர், "நீலக் கார்முகில் கமலம் பூத்து மண்ணுற்று வரிவில் ஏந்தி வருவதேபோல வந்தான்" என்பர். மேகத்தில் தாமரை பூக்காது; மேகம் வில்லொன்று ஏந்தித் தரையிலே நடந்துவராது. வருமாயின் அது இராமன் வந்ததற்கு நிகர். ஆதலின் இல் பொருள் உவமை.

மேல்காட்டிய உதாரணங்களில், மலை மேகம் தாமரை வில் மின்னல் முதலிய பொருள்கள் உண்டு. ஆதலால், இல்பொருள் உவமை என்று எப்படிக் கூறலாம் என்னும் ஐயம் வேண்டா. மலையிலும் மேகத்தி



மற்றது, அவை கூவினது. யாமக் கோழிகள் கூவுவது இயற்கை. ஆனல், இப்பொழுது அவை கூவினதை, சூரியனைச் சீக்கிரம் வாவென்று அழைத்ததாகக் கவி குறிக்கின்றார். ஆகையால் தற்குறிப்பேற்ற அணியாம். ஆனல் எவ்வகைத் தற்குறிப் பேற்ற அணி? தமயந்தியின் துயரைக் கண்டு கூவின என்று சேர்க்கும்போது அது உளபுல ஏதுத் தற்குறிப் பேற்றமாகும். ஆனல் அதனையே, "வெய்யோனை வாவுபரித் தேர் ஏறி வா என்று அழைப்பன போல்" கூவின என்று சேர்த்துப் பார்த்தால் பயன் தற்குறிப் பேற்ற அணியாகும். இயற்கையாக நிகழ்வதற்கு ஒரு பயன் கற்பித்து நிகழ்வதாகக் கூறுவது பயன் தற்குறிப்பேற்றம். சூரியன் விரைவில் வரவேண்டும் என்னும் பயனைக் கருதி இக் கோழிகள் கூவி அழைத்தனவெனக் குறிப்பதால் பயன் தற்குறிப்பேற்ற அணியாயிற்று. பயன் தற்குறிப்பேற்றத்திலும் இல்புலம் உளபுலம் என இருவகையுண்டு என்று சொல்லியிருக்கின்றோம். கோழிகூவும் போது சூரியனை வரவழைக்கவேண்டும் என்னும் பயனைக் கருதிக் கூவவில்லையாயினும், கூவியதாயகிய விஷயம் இருந்தது. இது கூவியதைக்கொண்டு அப்பயனைக் கற்பிக்கக் கவிக்குப் புலம் அல்லது இடம் ஏற்பட்டது. எனவே இது உளபுலப் பயன் தற்குறிப் பேற்ற அணி ஆயிற்று.

இந்தச் செய்யுளில், தமயந்தியின் துயரிற்குத் தரியாது கோழிகள் வயிற்றி லடித்துக்கொண்டன வென்பது ஒன்றும், அவள் துயர் சிறிது ஆறும்படி சூரியனை வாவென்று கூவின என்பது ஒன்றும் ஆகிய இரண்டு கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. இவைகளில் முதல்கருத்தைக் கம்பராமாயணத்தில் கைகேசி சூழ் வினையால் தயாதன் துயருற்றுக்கிடந்த இரவு விடிகின்றதென்று கூறும் செய்யுளிலும் காணலாம்.

எண்டருங்கடை சென்றயாமமி
யம்புகின்றன வேழையால்
வண்டுதங்கிய தொங்கல்மார்பன்
மயங்கிவிம்மிய வாறெலாம்
கண்டுநெஞ்சுக லங்கியஞ்சிறை
யானகாமர் துணைக்கரம்
கொண்டுதம்வயி றெற்றியெற்றிவி
ளிப்பபோன்றன கோழியே.

இச் செய்யுளின் பொருள்:—எட்டாவது யாமக் கடைசியில் கூவுகின்ற கோழிகள், கைகேசியால், வண்டுகள் தங்கிய மாலையை அணிந்த மார்பையுடைய தயாதன் மயங்கி விம்மியதை எல்லாம் பார்த்துத் தம் மனம் கலங்கித் தம் அழகிய சிறகுகளாகிய அழகிய இரண்டு கைகளையும் கொண்டு தம் வயிற்றில் அடித்து அடித்துக் கூவின போன்றன.

---

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

[829-வது பக்கத் தொடர்ச்சி]

4-ம் பத்து, 1-ம் தசகம்.
1-ம் பாசுரம்.

ஒருநா யகமா யோட வுலகுட னண்டவர்
கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர்
பெருநா டுகாண விம்மையிலே பிச்சைதாங் கொள்வர்
திருநா ரணன்தாள் காலம் பெறச்சிந்தித் துய்மினே.

அவதாரிகை:—திருவாய்மொழி முதல்பத்தில் பகவான்தான் தேவமனுஷ்யாதிகளுக்கு மோக்ஷோபாயமென்று நிரூபித்தார். இரண்டாவது பத்தில் அவன் தான் அடையவேண்டிய புருஷார்த்தமென்றும் அவன் தான் பரம போக்யன் என்றும் அறுதியிட்டார். இந்த இரண்டையும் அடைவதற்குரிய உபாயமும், அடையும் பலனும் பகவானது திவ்யமங்கள விக்ரஹத்துக்கேஉளஎன்று மூன்றாம்பத்தில் பரக்க உபதேசித்தார். இந்த நாலாம்பத்தில், அந்தத் திவ்யமங்கள விசிஷ்டனை பகவானுக்குத்தான் அழிவில்லாத நித்திய ஐசுவரியமும் பரத்துவமு முண்டென்றும், அல்பமான லோக ஐசுவரியத்தையும் அஸ்திரமான கைவல்யத்தையும் விட்டுப் பகவானையே நித்திய பரம் பொருளென்று பற்றுங்கோளென்றும் அறுதியிடுகிறார். இரண்டாம் பத்திலேயே பகவான் ப்ராப்ய வஸ்து வென்று சொல்லிமுடித்தவர் இந்தப் ப்ராப்யத்தின் பெருமையே திரும்பியும் பேசுவானேன். அவனது உபாயத்துவத்தைஎடுத்து உறுதிப்படுத்தலாமல்லவா என்று ஒரு ஆக்ஷேபம் உதிக்கலாம். இப் பெரியார் திருவுள்ளம் சற்றுமுன் தாம் அடையும் பெரும்பேறிலேயே ஊன்றி இருந்தமையால் அந்த விஷயத்தை விஸ்தரித்துப் பேசுவது ஸஹஜமென்று நாம் கொள்ளுதல் ஸந்தர்ப்பத்துக்கு மிகப் பொருத்தமாகும்.

மேற்காட்டியதன்றியும் இன்னுமொரு விஷயம்இங்கு எடுத்துரைக்க உளது. இப்பெரியார், "சொன்னல் விரோதம்" என்கிற 3-ம்பத்து 9-ம் தசகத்தில் புலவர்களையும் பண்டிதர்களையும் விளித்து, பகவானையே கவி பாடுங்கோள் அதுவே ஸ்வயம்ப்ரயோஜனம், அவனை அடுத்தால் மற்றுமுள்ள உலகலாபங்களையும்பெறலாம் என்று உபதேசித்தாராயினும், இவ்வுபதேசங்களுக்கிணங்கி அவர்கள் திருந்தாதிருக்கவே திரும்பியும் இந்த நாலாம்பத்தில் பரோபதேசம் செய்ய ஆரம்பிப்பது எப்படி? இப்பெரியாரே இவர்களுக்கு உபதேசிப்பது பயனில்லை என்று 3-ம் பத்து 10-ம் தசகமாகிய "சன்மம் பலபலசெய்து" என்பதில்நிவர்த்தியடைந்து தம் ஸ்வய பரமேகாந்தமான பக்தியைப் பேசி இருப்பவராக, திரும்பியும் உபதேசிப்பது ஸங்கதமாகுமோ என்ன, இப் பத்தாம்தசகத்தினல் தமக்கு உண்டான உவகை இவரைத் திரும்பியும் தூண்டவே பரோபதேசத்தில் இழிய இடமுண்டாயிற்று. பகவானிடத்திலேயே பக்தியும் அத்யந்தப்ரியமுமுள்ளவர்களும் சிற்சிலர் இல்லையோ? அவரைக் கூட்டிக்கொண்டாகிலும் அவனது குணத்தை அநுபவிப்போம் என்று பார்த்து இறங்கியபடி. முதல்பத்தில் "விடுமின் முற்றவும்" என்கிற தசகத்தில் பரோபதேசம் செய்தது மனுஷ்யரைப் பக்தியோகம் செய்யுங்கோள் என்றபடி; சென்ற பத்தில், "சொன்னல் விரோதம்" என்றதசகத்தில் உலகத்தார் ஐசுவரியத்தையே நாடி முயற்சிப்பதைக்கண்டு இந்த ஐசுவரியந்தான் நிலைநிற்பதொன்றன்று என்று

நிரூபித்துப் பகவானுக்குத் தாஸியம் செய்யுங்கோள், அது நிலைபெற்ற நன்மை என்று உபதேசிக்கிறார்.

உரை:—உலகுடன் - உலகத்தாரோடுகூட—அதாவது உலகத்தாரின் ஆதரவோடு—அதாவது ஜநங்களையனுசரித்து, ஓட - எல்லாத் தேசங்களும் அகப்படவியாபித்து, ஒரு நாயகமாய் - ஏகாதிபத்தியமாய், ஆண்டவர் - ஆதிபத்தியம் வஹித்தவர், இம்மையிலே - தமது ஆயுளுக்குள்ளே, கருநாய் - கறுத்த வர்ணமுள்ள நாயாலே, கவர்ந்த - கடிக்கப்பட்ட, காலர்-கால்களை உடையவர்கள் ஆகி, பெரிய ராஜ்ஜியாதிபத்தியம் பண்ணினவராகையால் தம் கஷ்டகாலத்தில் பகலில் பிச்சைக்குப்போக லச்சையினுல் தயங்கி இரவில் பிச்சைக்குப் போவார். அங்ஙனம் இருட்டில் வீதிகளில் போகையில் வழியில் கிடக்கும் கறுப்பு நாயின்மேல் இடறுவதினுல் அது காலைக் கடித்துப் பிடித்துக்கொள்வது ஸம்பாவிதம். எதிரிகளோ தன் துவேஷிகளோ பிடித்து இன்னம் துயரத்துக்கு ஆளாக்கி விட்டாலோ வென்ற பயமுங்கூட இருக்கலாம். சிதைகிய - உடைந்துபோன, பானையர் - பானைகளையுடையவராய், உடையாத புது மண்பாண்டம் தங்களுக்குக் கிடைக்காமையாலே வீதியில் உபயோகமில்லை என்று எறிந்துவிட்ட பானையை, தாம் வாங்கும் பிக்ஷையைச் சேகரித்து வைப்பதற்காகக் கையில் பிடித்தவராய், பெருநாடு - உலகத்தெல்லாரும்,காணகாணும்படியாக; முதல் முதலில் லச்சையாலும் பயத்தாலும் இராப்பிச்சைக்குப் புறப்பட்டவர் இரவில் நாய் கவரவே, எங்ஙனேயானுலுமாகுக, பகலிலேயே பிச்சைக்குப் போவோமென்று துணிந்து பகலிலேயே பிச்சைக்குப்போவதால் எல்லாரும் கண்ணுல் காண இடமாயிற்றென்பது தாத்பரியம். பிச்சைதாம் கொள்வர் - பிக்ஷையை யாசிப்பார்கள், தாம் என்பது தாங்களே என்று, அதாவது பிள்ளைகளோ மற்ற உறவினர்களோ யாசித்துக்கொண்டுவந்து கொடுப்பவர் இல்லாமைபற்றித் தமக்குத்தாமே பிச்சை தேடுவாரென்று தாத்பரியம். ஆகவே, திருநாரணன் தாள் - ஸ்ரீஸஹிதனை நாராயணன் ஸ்ரீ பாதங்களை; சிந்தித்து - தகுந்த பெரிய புருஷார்த்தமாக நினைத்து; உய்மினோ - புருஷார்த்த லாபத்தை அடைந்து உய்யுங்கோள். ஐசுவரியம் அஸ்திர மென்றறிந்து பகவானைப் பற்றுங்கோள், என்றபடி.

---

2-ம் பாசுரம்.

உய்ம்மின் றிரைகொணர்ந் தென்றுல
காண்டவ ரிம்மையே
தம்மின் சுவைமட வாரைப்
பிறர்கொள்ளத் தாம்விட்டு
வெம்மி னொளிவெயிற் கானகம்
போய்க்குமை தின்பர்கள்
செம்மின் முடித்திரு மாலை
விரைந்தடி சேர்மினோ.

உரை:—திரை கொணர்ந்து உய்மின் - ஒரு ராஜாவானவன் மற்றசிற்றரசர்களைநோக்கி "நீங்கள் பிழைக்க வேண்டுமானுல் கப்பமாக உங்கள் சொத்துக்களை எல்லாம் கொண்டுவந்து கொடுங்கோள்" என்று உத்திரவிட்டு, உலகாண்டவர் - உலகத்தை ஆண்டவர்கள், இம்மையே - தங்கள் ஆயுள்நாள் முடிவதன் முன்னரே, தம் இன் சுவை மடவாரை-தமக்கு இன்பரஸங்களைக் கொடுத்த பெண்டிர்களை, பிறர் கொள்ள - சத்துருக்கள் கைப்பற்றிக் கொண்டுபோக, தாம் விட்டு - தாம் அவர்களை இழந்து, அல்லது தாங்களே ஸ்வயரக்ஷணார்த்தம் அவர்களை எதிரிவசத்தில் விட்டுக்கொடுத்து, வெம்-கொடுமையான, மின்னொளிவெயில்-வெகு வெப்பமான வெயிலையுடைய, கானகம் - காட்டுக்குப் போய், குமை - பீடையை, தின்பர்கள் - அநுபவிப்பார்கள். ஆகவே, செம் மின் முடி - சூரிய காந்திபோல் ஸ்வர்ணகிரீடமுள்ள-முடி என்பது எல்லாத் திவ்வியாபரணங்களுக்கும் உபலக்ஷணம். திருமாலை - ஸ்ரீயப்பதியை, விரைந்து-அவசரமாய் அடைந்து, அடிசேர்மினோ - ஸ்ரீ பாதங்களைச் சேருங்கோள்.

குறிப்பு:—முதல்பாசுரத்தில் நஷ்ட ராஜ்ஜியமும் வறுமையும் விதிவசமாய் வந்தெய்து மென்றார். இப்பாசுரத்தில் ராஜ்ஜிய பிரஷ்டமும், காட்டில் திரிவதும், இஷ்டகளத்திராதிகளைமனதார இழப்பதும்முதலான துக்கஹேதுக்களைக் கூறுகிறார்.

---

3-ம் பாசுரம்.

அடிசேர் முடியின ராகி யரசர்க டாந்தொழ
இடிசேர் முரசங்கள் முற்றத் தியம்ப விருந்தவர்
பொடிசேர் துகளாய்ப் போவர்க ளாதலி னெக்கெனக்
கடிசேர் துழாய்முடிக் கண்ணன் கழல்கள் நினைமினே.

அவதாரிகை:-இப்பாசுரத்தில், சக்காவர்த்திகளும் கூடத் தூளாய்ப் போவார்கள், அதாவது, நசித்துப் போவார்களென்றும் உயிர்வாழ்க்கை அஸ்திரமென்றும் வற்புறுத்துகிறார். இப்பாசுரத்தில் ஆழ்வார், தற்காலம் நடந்தேறும் பெரிய தர்பார்களைப் பார்த்தவர் போல் வர்ணிப்பது ஆச்சரியப்படத் தக்கது.

உரை:—அடிசேர் - (சக்கரவர்த்தியின்) பாதங்களை அடைந்து வணங்கும், முடியினராகி - கிரீடம் தரித்தவர்களாகி, அரசர்-சிற்றரசர்கள், தாம்-வலிய அரசன் பராக்கிரமத்திற்கு அச்சத்தால் உள்பட்டுத் தாமாகவே, தொழ - தலைகளைச் சாய்த்துத் தொழ, சக்கரவர்த்தியாய்க் கிரீடம் தரித்தவன் யார் தொழுகிறானென்று கூடப் பார்க்காமல் உதாஸீனமாய் இருந்த, இடிசேர்-இடியைப்போல் முழங்குகின்ற, முரசங்கள் - கொட்டு மத்தளங்கள், முற்றத்து-சபையின் ஓர் அங்கணத்திலே, இயம்ப - சப்திக்க, இருந்தவர் - சிம்மாசனத்தில் ஏகசக்கரவர்த்தியாய் விளங்கினவர்கள், பொடிசேர்-ஓர் தூளியோடு மற்றொரு தூளி சேர்வதுபோல், துகளாய்ப் போவார்கள் - இறந்துபட்டுப் போனவிடம் தெரியாமல் தூசிபோல் கண்ணுக்குக்காணுதுபோவார்கள், ஆதலின்-ஆகவே,நொக்கென-இந்தக்ஷணத்திலே தானே,கடிசேர் - பரிமளம் வீசுகின்ற, துழாய் முடிக் கண்ணன்-துளசியைக் கிரீடத்தில் தரித்த ஸ்ரீ கிருஷ்ண பகவானை, அதாவது மனுஷியனுய் அவதரித்து மனுஷருடைய துக்கங்களைப் போக்குவதில் சுலபனுன ஸ்ரீ கிருஷ்ண பகவானது, கழல்கள் நினைமினோ-பாதங்களைப் பரமப் பிராப்பியமென்று நினைத்து மனத்தால் அவனைப் பற்றுங்கோள்.

---

4-ம் பாசுரம்.

நினைப்பான் புகிற்கட லெக்கலி
னுண்மண லிற்பல
ரெனைத்தோ ருகங்களு மிவ்வுல
காண்டு கழிந்தவர்



மனைப்பான் மருங்கற மாய்ந்த
தல்லான் மற்றுக் கண்டிலம்
பனைத்தாள் மதக்களி றட்டவன்
பாதம் பணிமினோ.

அவதாரிகை:-ஏகசக்காதிபத்தியம் வஹித்தவரை விட்டுவிடுவோம். மற்று, எத்தனையோபேர்கள் சில்லரை ராஜாக்களாகவும், அதிகாரிகளாகவும், பிரபுக்களாகவும், பெருந்தலைவர்களாகவும் இந்த உலகத்தில் சுகமாய் வாழவில்லையோ. நாம் அவர்கள்போல் ஆகக்கூடாதோவென்றால், இவர்கள் கோடிக்கணக்காய் இருந்த இடம் சுவடுதெரியாமலே அப்போதைக் கப்போதே அவர் அநுபவித்த ஐசுவரியத்தை இழந்து நசித்துப் போனார்கள் என்கிறார்.

பதக்குறிப்புக்கள்:—மனைப்பால் மருங்கு அற-மனை - வீடு, மருங்கு - வீட்டின் பக்கம், பால் - சுற்றியுள்ள இடம், அற - இவைகள் எவ்விடம் இருந்ததென்று தெரியாமல், மற்று கண்டிலம் - வேறு விதமாய் அதாவது ஸ்திரமாய் இருந்ததாய், கண்டிலம்-பார்த்திலம், கடலின் எக்கல் மணல்-கடலின் எக்கலிலுள்ள மணலை எவ்வண்ணம் எண்ண முடியாதோ அவ்வண்ணம் கணக்கிடக்கூடாத ஐசுவரியம் ஆண்டவர்கள் மரித்தார்கள். மதக்களிறு - கம்ஸன் ஏவிய குவலயாபீடம் என்ற யானையை, அட்ட - கொன்ற.

பொழிப்புரை:—ஐசுவரியத்தை அநுபவித்தவர்களெல்லாரும் கோடிக் கணக்காய் அவர் இருந்த இடம் மாடங்கள் தோட்டங்கள் எல்லாம் சுவடு தெரியாமல் அழிந்து போனார்களேயன்றி மற்றும் ஸ்திரமா யிருந்தார் ஒருவரையும் காண்கிலோம். ஆனதுபற்றி ஆச்ரித விரோதிகளை நசிப்பித்து அவர்களை ரக்ஷிக்கும் ஸ்வபாவனை ஸ்ரீ கிருஷ்ணன் திருவடிகளைப் பணியுங்கோள்.

விசேஷக்குறிப்பு:—இந்தப் பாசுரத்தில் எடுத்துக் கூறிய ஐசுவரியம் பிறரை ஆட்சிசெய்து அநுபவிக்கும் ஆஞ்ஞா ரஸம்.

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[832-வது பக்கத் தொடர்ச்சி]

8. தருக்கம்.

அநிஷ்டப் பிரசங்கம் தர்க்கம் (Unpleasant truth being exposed); அநிஷ்டம் என்றால் இஷ்டப்படாதது. எனவே அநிஷ்டப் பிரசங்கம் இஷ்டமாகாததைக் கூறுதலாம். தர்க்கம் என்பது யுக்தி. அது விசார வடிவமானது. அது, சித்தமான வியாத்தியையுடைய (Ready made) பக்க தருமம், சாத்திய தருமம் என்னும் இரண்டனுள் வியாப்பிய அங்கீகாரத்தால் அநிஷ்டமான வியாபகத்தின் வரவு. இது அநுமான சோதகமுமாம். இதை மிகவும் அழகாய்ச் சுந்தரமூர்த்திநாயனார் பாடல் ஒன்றில் காணலாம்.

செறிவுண் டேன்மனத் தாற்றெளி வுண்டேற்
றேற்றத் தால்வருஞ் சிக்கன வுண்டேல்,
மறிவுண் டேன்மறு மைப்பிறப் புண்டேல்,
வாணுள் மேற்செல்லும் வஞ்சனை யுண்டேல்,
பொறிவண் டியாழ்செயும் பொன்மலர்க் கொன்றை
பொன்போ லுஞ்சடை மேற்புனைந் தானை
அறிவுண் டேயுட லத்துயி ருண்டே
யாரு ரானைம றக்கலு மாமே?

திருவாரூர் - பண் - தக்கேசி. 5.

எனவே, இது சாதக பாதகத்தைச் சீர்தூக்கி ஆய்தலாம். இது சமுசயங்களை ஆராயினும் சமுசயத்தைச் சேர்ந்ததன்று. வாதிப் பிரதிவாதிகளின் சங்கை சமாதானங்கள் சமமாயிருத்தலைப் பிரதிபந்தி யென்பர். இத்தகைய சந்தர்ப்பங்களில் உண்மைநிலை காண்பதே தர்க்கத்தின் ஏற்றமாகும்.

பொருளுஞ் சுற்றமும் பொய்ம்மையும் விட்டுநீர்
மருளு மாந்தரை மாற்றி மயக்கறுத்
தருளு மாவல்ல வாதியா யென்றலும்
மருள றுத்திடும் வான்மியூ ரீசனே

திருவான்மியூர் - திருக்குறுந்தொகை. 2.

9. நிர்ணயம்.

அவதாரண ஞானம், அதாவது நிச்சயமானஞானம் நிர்ணயமாம். இதற்கு உதாரணம் திருஞானசம்பந்தர் திருக்கடைக் காப்புச் செய்யுட்களாகும்:—

சாந்தங் கமழ்மறுகிற் சண்பை ஞானசம்பந்தன்
ஆந்தண் பழையனூ ராலங்காட் டெம்மடிகளை
வேந்த னருளாலே விரித்த பாடலிவை வல்லார்
சேர்ந்த விடமெல்லாந் தீர்த்தமாகச் சேர்வாரே"

எனத் திருவாலங்காட்டுப் பதிகத் திருக்கடைக் காப்புச் செய்யுளில், "வேந்தனருளாலே விரித்த பாடல்" தனது பதிகமாதலால் அதன் பயன் இன்னதெனக் குறிப்புமுறையில் நிர்ணயம் செய்திருப்பது காண்க. ஏனெனில் இவர் தனதுகடவுள் "எனதுரை தனதுரையாகக்" கொண்டனனென்று திருவிலம்பையங்கோட்டூர் முதலிய திருத்தலங்ளிற் பாடியதையுங் காண்க.

நம்பியாரூரர் தம்முடைய திருப்பதிகங்களில் திருக்கடைக்காப்புச் செய்யுளில் தனது பதிக பாராயணத்தின் பயன் இன்ன தென்பதைக் காரணங்களுடன் வெளிப்படையில் செப்பி நிர்ணயிப்பதும் காண்க.

பத்தர் சித்தர் பலரேத்தும் பரமன் பழைய னூர்மேய
அத்த னாலங்காடன்ற னடிமைத்திறமே யன்பாகிச்
சித்தர் சித்தம் வைத்தபுகழ்ச் சிறுவ னூர னொண்ட
[மிழ்கள்
பத்தும் பாடி யாடுவார் பரமனடியே பணிவாரே

திருவாலங்காடு-பண்-பழம்பஞ்சரம் 10.

திருநாவுக்கரசோ, தனது பதிகங்களுக்குத் திருக்கடைக்காப்பென்னும், ஓதுவான் பயன் காட்டும் செய்யுள் ஈற்றில் பாடும் வழக்கம் கொண்டவரல்லர். ஆதலால், வஸ்து முதலிய தத்துவநிர்ணயம் அவர் பதிகத்தில் ஆங்காங்கு ஏகதேசத்திலும் தொடர்ச்சியிலும் காணப்படும். திருவாலங்காட்டுத் திருத்தாண்டகம், இரண்டாவதான வகைக்கு உதாரணமாம். அவை முற்றும் தேவாரத்தில் காண்க.

ஒன்று வுலகனைத்து மானார் தாமே
யூழிதோ றூழி யுயர்ந்தார் தாமே
நின்றாகி யெங்கு நிமிர்ந்தார் தாமே
நீர்வளிதீ யாகாச மானார் தாமே

கோன்றுடும் கூற்றை யுதைத்தார் தாமே
கோலப் பழனை யுடையார் தாமே
சென்றுடும் தீர்த்தங்க ளானூர் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே.

மாலைப் பிறைசென்னி வைத்தார் தாமே
வண்கயிலை மாமலையை வந்தியாத
நீலக் கடல்சூ ழிலங்கைக் கோனை
நெரிய விரலா லடர்த்தார் தாமே
பாலொத்த மேனி நிறத்தார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
சீலத்தா ரேத்தும் திறத்தார் தாமே
திருவாலங் காடுடைய செல்வர் தாமே.

திருவாலங்காடு - திருத்தாண்டகம்.

அப்பர் பதிகங்களில் நிண்ணயம், குறிப்பு வகையிலா, அல்லது வெளிப்படையிலா காண்கின்றதென்பது பல பாசுரங்களில் ஐயுறவுண்டாகும். பின்வரும் பாசுரம் எத்தகையதென்பதைக் கற்றோர் ஆராய்க:—

வெற்றரைச் சமண ரோடு
விலையுடைக் கூறை போர்க்கும்
ஒற்றரைச் சோற்கள் கோள்ளார்
குணங்களை யுகப்பர் போலும்
பெற்றமே யுகந்தங் கேறும்
பெருமையை யுடையர் போலும்
அற்றங்க ளறிவர் போலு
மாலங்காட் டடிக ளாரே.

திருவாலங்காடு - திருநேரிசை 9.

## 10. வாதம் (Argument)

தத்துவம் அதாவது உண்மை யறியவேண்டுவோன் கதை வாதமெனப்படும். அது எட்டுவகை நிக்கிரகங்கட்கு (நிவர்த்திசெய்யவேண்டியவைகளுக்கு) இடந்தரலாகாது. அந்நிக்கிரகங்களாவன (1) நியூனம் (2) அதிகம் (3) அபசித்தாந்தம் (4) ஐந்துவகை (ஏத்துவாபாசங்கள்) ஏதுப்போலிகள். அவற்றுள்—

நியூனமென்பது குன்றக்கூறல், அதிகமென்பது மிகைப்படக் கூறல். இலக்கணத்தில் கூறும் பத்துக்குற்றங்களின் முதலில் எடுத்துக்காட்டும் இவ்விரண்டும் தர்க்கத்தில் வெகு சாக்கிரதையாய் வாராமல் காக்க வேண்டியது நல்ல வாதியின் தொழிலாம். இன்றேல் வாதத்தின் அந்தம் கெடும். அபசித்தாந்தமென்பது சித்தாந்தப்போலி. இத்துடன் சம்பந்தமாவது சற்பம் (Sophistry). மிகவும் அறிவுள்ள கற்றோருக்கே இத்தோஷம் விளங்கும்; மற்றோருக்கு விளங்காது. நல்ல வாதம்போல் காணப்படும் ஐவகை ஏத்துவாபாசங்களை விரிவாகப் பின்னே காட்டுவோம். இவ்வெட்டு வகைத் தோஷங்களைக் கொள்ளாமல் வாதம் செய்வதே தர்க்கவாதமாம். இவற்றைத் தாயுமானவர்—

பன்முகச் சமய நெறிப டைத்தவரும்
யாங்க ளேகடவு ளென்றிடும்
பாத கத்தவரும் வாத தர்க்கமிடு
படிற ருந்தலை வணங்கிடத்
தன்மு கத்திலுயிர் வரவ ழைக்குமெம
தரும னும்பகடு மேய்க்கியாய்த்
தனியி ருப்பவட நீழ லூடிவளர்
சனக னதிமுனி வோர்கள்தஞ்
சொன்ம யக்கமது தீர வங்கைகொடு
மோன ஞானம துணர்த்தியே
சுத்த நித்தவரு ளியல்ப தாகவுள
சோம சேகர க்ருபாளுவாய்த்
தென்மு கத்தின்முக மாயி ருந்தகொலு
எம்மு கத்திலும் வணங்குவேன்
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே

சிற்சுகோதய விலாசம் 10.

உண்மைப் பொருளை யறிய விரும்புகின்ற புருடர்களிருவருடைய வினுவிடைகளாகிய தொடர்மொழிக் கதை வாதமென்று பெரும்பாலும் கூறப்படும். தத்துவ நிண்ணயப் பிரயோசன முடைய குருசீட சம்வாதமே பெரும்பாலும் இதில் பயனுவது. (உ - ம்)

இன்றெனை விருப்போ மென்னின்
என்றுஞ்சூ னியமா முத்தி
நன்றுடு தீது மன்றி
நாமுன்னே பெறும வித்தை
நின்றது பெத்தந் தானே
நிரந்தர முத்தி யென்னின்
ஒன்றொரு வரைநான் கேட்க
வுணர்வில்லை குருவு மில்லை.

இல்லையென் றிடினிப் பூமி
யிருந்தவா றிருப்போ மென்னில்
நல்லவன் சாரு வாகன்
நான்சொலும் நெறிக்கு வீணில்
தொல்லையே னுக மாதி
தொடுப்பதேன் மயக்க மேதிங்
கொல்லைவந் திருமி னென்ன
வுறவுசெய் திடுவ னந்தோ

தாயுமானவர் - தேன்முகம் 7, 8, 9.

சிவத்தின், பராக்கிரமமா அல்லது அன்பா நம்மையாட்கொள்வதென்னும் வாதத்தைப் பின்வரும் அப்பர் பாசுரத்தில் காண்க:—

நாதனு ரென்ன நாளு
நடுங்கின ராகித் தங்கள்
ஏதங்க ளறிய மாட்டா
ரிணையடி தொழுதோ மென்பார்
ஆதனு னவனென் றெள்கி
யதிகைவீ ரட்ட னேநின்
பாதநான் பரவா துய்க்கும்
பழவினைப் பரிசி லேனே.

திருவதிகைவீரட்டானம் - திருநேரிசை 3.

## 11. சற்பம் (Sophistry)

இரண்டு சாதனங்களுடையதாய் வெல்லவேண்டுமென்னு மிச்சையுடையான் கதை சற்பம். முன்னர்க் கூறிய நிக்கிரகங்களைத் தழுவி அவற்றிற்கு இடங்கொடுப்பதும், இதர வாதிகள் பட்சத்தை நிந்தித்துத் தனது பட்சத்தைநிறுவும் பிரயோகமுடிவாயுள்ளதும் சற்பம். இது பெரும்பாலும் யுக்திப் பிரமாணங்களில் வல்ல பண்டிதர்களின் வாதமாம். வன்றொண்டர் சிவபெருமானை "உமக் காள்செய வஞ்சுதும்" என்று திருப்பரங்குன்றப் பதிகத்தில் பாடியது இச்சற்ப சொருபத்தில் ஆகும். அதற்குரிய காரணங்களை அவர் வாதத்தில் பொருத்துவது காண்க :—

முண்டந் தரித்தீர் முதுகா டுறைவீர்
முழுநீறு மெய்பூசு தீர்மூக்கப் பாம்பைக்
கண்டத்தி லுந்தோளி லுங்கட்டி வைத்தீர்
கடலைக் கடைந்திட்ட தோர்நஞ்சை யுண்டீர்



பிண்டஞ் சுமந்தும் மொடுங்கூட மாட்டோம்
பெரியா ரொடுநட் பினிதென் றிருந்தும்
அண்டங் கடந்தப் புறத்து மிருந்தீ
ரடிகே ளுமக்காட் செயவஞ் சுதுமே.
கோளா ளியகுஞ் சரங்கோ ளிழைத்தீர்
மலையின் றலையல் லதுகோயில் கொள்ளீர்
வேளா ளியகா மனைவெந் தழிய
விழித்தீ ரதுவன்றி யும்வேய் புரையும்
தோளா ளுமைநங்கை யோர்பங் குடையீ
ருடுகூறை யுஞ்சோறுந் தந்தாள கில்லீர்
ஆளா ளியவேகற் றீரெம் பெருமா
னடிகே ளுமக்காட் செயவஞ் சுதுமே.

வன்றொண்டர்.

பிரகரணசம் (சற்பிரதி பக்கம்) என்னும் ஏதுப்போலி உபயசாதன முடையதாய் வெல்லவேண்டுமென்னும் இச்சையுடையோன் தொகுக்கும் கதையாயிருப்பது சற்பம். அது, தோல்விக்கு ஏது யாது யாது கிடைக்கின்றதோ * அதற்கு உடனே அது இடங்கொடுத்து மேலே செல்லும். எனவே ஒருவரை யொருவர் தோற்கடித்துப்பெறும்வெற்றிவிருப்பத்தால் தமதிரண்டுபட்சங்களையும் ஸ்தாபித்தலாகியகதையும் சற்பமாம். இது தாயுமானவர் பாடலொன்றை எவர்க்கும் நினைப்பூட்டும்:—

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றுமறி வில்லாதவென்
கர்மத்தை யென்சொல்வேன் மதியையென் சொல் [வேன்
கைவல்ய ஞானநீதி
நல்லோ ருரைக்கிலோ கர்மமுக் கியமென்று
நாட்டுவேன் கர்மமொருவன்
நாட்டினு லோபழைய ஞானமுக் கியமென்று
நவிலுவேன் வடமொழியிலே
வல்லா னொருத்தன்வர வுந்திரா விடத்திலே
வந்தாவா விவகரிப்பேன்
வல்லதமி ழறிஞர்வரி னங்ஙனே வடமொழியில்
வசனங்கள் சிறிது புகல்வேன்
வெல்லாம லெவரையு மருட்டிவிட வகைவந்த
வித்தையென் முத்திதருமோ ?
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே!

சித்தர்கணம் 10.

* வாதுக்கு வந்தெதிர்த்த மல்லரைப்போற் பாழ்த்தமனம்
ஏதுக்குக் கூத்தாடு தெந்தாய் பராபரமே?

பராபரக்கண்ணி 170.

## 12. விதண்டை (Cavilling)

இதைக் குதர்க்கமென்றும் கூறுவார். விதண்டாவாதம் செய்பவனுக்குப் பட்சமில்லை. யாதும் ஸ்தாபிக்க அறியான். பரபட்சதூஷணமன்றி இதற்கு வேறுதொழிலில்லை.

"தர்க்கமிட்டுப் பாழாம் சமயக் குதர்க்கம்விட்டு
நிற்குமவர் கண்டவழி நேர்பெறுவ தெந்நாளோ

எந்நாட்கண்ணி 8.

என்றூர் தாயுமானவர்

சொல்வார் பலரையுடையதாய்ப் பூர்வோத்திர பட்சத்தைப்பிரதிபாதிக்கும்வாக்கியக் கோவையான கதையே விதண்டை. இது யுக்திப் பிரமாணங்களில்லாத மூர்க்கர்களது வாதமாம். இது இம்மைக்கும் பயன்படாமல் மறுமைக்கும் பயன்படாமல் நிற்பதென்பர் மேலோர். திருநாவுக்கரசும், அவ்வாறே சமணர் கட்டுரைகளை விதண்டைக்கே ஒப்பாகக் குறிப்பிடுவர்:—

ஒருபிறப்பி லானடியை யுணர்ந்துங் காணு
ருயர்கதிக்கு வழித்தேடிப் போக மாட்டார்
வருபிறப்போன் றுணராது மாசு பூசி
வழிகாணு தவர்போல்வார் மனத்த னுகி
அருபிறப்பை யறுப்பிக்கு மதிகை யூர
னம்மான்ற னடியிணையே யணைந்து வாழா
திருபிறப்பும் வெறுவியரா யிருந்தார் சொற்கேட்
டேழையே னன்பண் டிகழ்ந்த வாறே!

திருவதிகை வீரட்டானம் - ஏழைத் திருத்தாண்டகம் 5.

மற்றும்,

பழிவழி யோடிய பாவிப்
பறிதலைக் குண்டர் தங்கள்
மொழிவழி யோடி முடிவேன்
முடியாமை காத்துக் கொண்டாய்
கழிவழி யோத முலவு
கடனாகைக் காரோ ணவென்
வழிவழி யாளாகும் வண்ண
மருளெங் கள்வா னவனே"

திருநாகைக்காரோணம்-திருவிருத்தம் 4.

என்பதிலும், அப்பர் இவ்விதண்டையைப் பழித்தல் காண்க.

# குடி வாழ்க்கை

**[Plato's Republic]**

[827-வது பக்கத் தொடர்ச்சி]

ஜனநாயகம் அல்லது எண்ணிக்கையாட்சி ஒருநாட்டின்நலத்திற் குரியதன்று என்றுகூறினேன். நியாயம், அழகு, சத்தியம் என்பனபற்றிப் பாமரஜனங்களுக்கு எவ்வித முடிவான அபிப்பிராயமும் இருப்பதில்லை. தத்துவ அறிவுபடைத்த மேன்மையோரே இவைகளைப்பற்றிய தீர்மானமான அபிப்பிராயமுடையவர்க ளாகவல்லவர். விஷயங்களைப்பற்றிய சாச்வத வாய்மையின் அறிவுடையவர்கள் அவர்களே யாவர். சத்தியமே அவர்களது அணிகலனுகும். அசத்தியம் அவர்களையணுகாது. அறிவின் ஆர்வத்தில் அவர்களுடைய சிறு ஆசைகளெல்லாம் மறைந்துவிடுகின்றன. காலமும் வாழ்க்கையும் அவர்களுக்குக் கண்காட்சியாகின்றனவேயல்லாமல், அவைகளால் அவர்கள் பற்றப்படுவதில்லை. சிந்தனையின் பெருமிதத்தில் வாழ்கின்ற அவர்களுக்கு மானுடவாழ்க்கை ஒரு பொருளன்று. சாவு அவர்களுக்கு அச்சத்தைத் தருவதில்லை. இவர் எல்லோருக்கும்அன்மையினராய் இருக்கும்எளியசுவபாவமும் உடையவர். கோழைத்தனம் அவர்களிடம் இராது, செருக்கும் அவர்களுக்கு அயலானது. எளிதில் கற்பதும், கற்றதைக் காத்துவைப்பதும் அவர்கள் தன்மை. பண்பட்டமனம் அவர்களது இயற்கையாகவே சத்தியம் அவர்களை வந்தடைகின்றது. இத்

தகைய நற்குணங்களின் வைப்பாகும். அன்னவர்பால் பொறாமைப் பேயாலும் குற்றங் காணமுடியுமா?

நான் முன்கூறியபடி, இத்தகைய நல்லோரை அறிவிலாமாக்களே கெடுக்கின்றனர் என்பதை மறத்தலாகாது. அவர்கள் கெடுக்கப்படுகின்றதற்குக் காரணம் என்னவென்று சிறிது ஆய்ந்துபார்ப்போம். சிற்சிலசமயங்களில், கெடுதல்களுக்குக் காரணமாயமையாத நல்ல வஸ்து என்பது ஒன்றுமில்லை. உடல் நலம், வன்மை, செல்வம் அந்தஸ்து, நல்லதன்மை ஆயவெல்லாம் தகுதியற்றநிலையில் (unfavourable circumstances) தீமைக்குரியவைகளாகலாம். தாவர உலகத்தை எடுத்துக்கொள்வோம். நல்ல விதைகள் பயிராவதற்கு நல்ல சத்துள்ள நிலமும் நல்ல காற்றும் வேண்டியிருக்கின்றன. நல்ல விதைகள் வளமில்லாநிலத்தில் கெட்டுவிடுகின்றன. மட்டமான விதைகள் கெட்ட நிலத்தில் கெட்டுவிடுகின்றதில்லை. பெரியவொரு பயனுக்கு உரியவைகள் அவைகள் ஆகமாட்டா. இது தத்துவ அறிவு உடையவர்களுக்கும் பொருந்தும். தத்துவ அறிவு படைத்தவன் மனிதஇனத்தில் மிக உயர்ந்தவனாகவாவது இருக்கவேண்டும், அல்லது மிக இழிந்தவனாகவாவது போகவேண்டும். அவன் இருக்கின்ற இடத்தின் தன்மையும், அவன் வளர்கின்ற காலப்போக்கும் அதற்குக் காரணமாகின்றன.

"ஸோபிஸ்டு" என்று அழைக்கப்படும் விதண்டாவாதச் சாமர்த்தியசாலிகள் நம்நாட்டு இளைஞர்களைக் கெடுத்துவிடுகின்றனர் என்று எல்லோரும் சொல்லக் கேட்கின்றேன். அவர்களைஎன் வீணே கடியவேண்டும். நம்நாட்டில் பொதுஜன அபிப்பிராயம் (Public opinion) என்னும் ஒன்றே நம்மைக் கெடுக்கின்றது. எங்குச் சென்றாலும் பொதுஜன அபிப்பிராயப் பேயினையே காண்கின்றோம். விதண்டாவாதத்தைக் கடிகின்றவர்களிடத்திலும் இப்பேயின் ஆட்டமே காண்கின்றோம். பொதுவிடங்களிலும், அரசியல் சபைகளிலும், நியாயமன்றங்களிலும், கண்காட்சிச் சாலைகளிலும், எங்கும் இப்பேயின் பாழ்படுநடமாட்டமே காணநேர்கின்றது. இத்தகைய நயமில்லாக் குழப்ப ஆரவாரத்தில் இளைஞர்மனம் இழுக்கப்பெறாமல் என்னசெய்யும். எந்தக் கல்விதான் அப்படுகுழியில் வீழாமல் ஒருவனைக் காக்கவல்லது. ஒன்றுமில்லை. ஒருவேளை அவனது நல்லறிவினால் இப்பேயின் வயமாகாமல் காத்துக்கொள்ளலாமென்றாலோ, பொதுஜன அபிப்பிராய விரோதி என்று அவன் நாடுகடத்தப்படுவான். சிற்சில சமயம் அவன் சாகவும் நேரும்.

ஒரு பெரிய காரியத்தை ஒருவன் செய்துவிட்டால் பொதுஜன அபிப்பிராயம் புகழ்கின்றது. வளரும்இளைஞன் இத்தகைய புகழைப் பெறவேண்டுமென்று அவாவுகின்றான். நாடு பிடிப்பதும் அரசாள்வதுமான எண்ணம் ஏற்படுகின்றது. அவனை அழைத்து, 'அப்பா, நீ முட்டாள், நீ நாடுபிடிப்பது பிறகு ஆகட்டும்" என்று கூறினால் அவன்சும்மாவிருப்பானா? நல்ல தன்மைவாய்ந்த ஒருவன் தத்துவஅறிவு பெற முயல்வானாயின் பொதுஜன அபிப்பிராயம் அவனை இடையில் கெடுத்துவிடவில்லையா? பொதுஜன அபிப்பிராயம் அறிவுடையவர்களை அரசியல்வாதிகளாக்குகின்றது. ஒரு நாட்டில் ஏற்படும் தீமைகளுக்கெல்லாம் அரசியல் வாதிகளே காரணம். அவர்கள் சிற்சில சமயங்களில் பெரிய நன்மைக்கும் காரணமாயிருக்க இயலும் என்று சிலர் கூறுவதை நான் மறக்காமலே இப்படித் துணிந்து சொல்கின்றேன். எனின், அறிவுடையவர்கள் அரசியல் வாதிகளாய் மாறிவிடுவதால் தத்துவ அறிவு புறக்கணிக்கப்படுகின்றது. பிறகு சிற்றினத்தவர் தத்துவ அறிவினது ஆட்சியைக் கைப்பற்றுகின்றனர். ஒரு கருமான் தான் அந்தஸ்தில் உயர்வதற்குத் தத்துவக்கலை நல்ல கருவியாகுமென்று எண்ணி, அவன் ஆயுதங்களைப் போட்டுவிட்டுத் தத்துவக்கலையின் உறவினைப் பெறவருகின்றான். உயர்ந்த நிலையுடையவர்களால் புறக்கணிக்கப்படுவதால், தத்துவ அறிவு இவ்வாறு இழிவுறுகின்றது. எனவே உண்மையான தத்துவ அறிவுடைய மேலோர் ஒருசிலரே இருக்கின்றனர். அத்தகையவர், உலகம் இருக்கின்ற அவலநிலையைக்கண்டு அதனின்று தங்களைக் காத்துக்கொள்ளக் கருதித் தனிமையைத் தேடிச் சென்றுவிடுகின்றனர்.

தாழ்ந்த வகுப்பினரும் கைத்தொழிலாளரும் தத்துவக்கலைகள் கற்கவருவதால் ஒரு நாட்டைக் கேடே சாரும். அவர்கள் கற்பதெல்லாம் தம்முடைய செல்வம் செல்வாக்குக்களை உயர்த்திக்கொள்ளவே. மேற்குல மக்களும் அரசகுமாரர்களும் தத்துவக்கலையில் பயின்று பண்புறவேண்டும். அப்பொழுதுதான் நாடும் மக்களும் சிறப்புறுவார்கள். நாடுகாக்கும் தொழிலைக் கொண்டோர் வித்தகமுடையவர்களாயிருக்கவேண்டும்.

முற்றிய வித்தகம் படைத்தோர்க்குச் சுகதுக்கம் என்னும் பேதம் ஒன்றுமில்லை. எந்நிலையிலும் தளராமல் தனிநிற்பர். அத்தகையவர் நாடுகாக்கும் தொழில் செய்ய விரும்பார். அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், நாட்டின் நலனை எண்ணி அவர்கள் அத்தொழிலைமேற்கொள்ளும்படி மற்றவர்செய்யவேண்டும். அப்பொழுதுதான் நாட்டிற்கு உய்வுண்டு. மற்று, நாடாள விரும்புபவர்களோ வித்தகர் அல்லர். அவர்கள் ஆள விரும்புவதால் அத்தொழிலை மேற்கொள்வதற்குஉரியவராகார். நல்ல வாழ்க்கையே அரசியல் ஆசையினும் பெரியது. அந் நல்வாழ்க்கையை நல்குவது வித்தகம். எனவே வித்தகமே நாட்டின் ஆட்சியைச் செய்வதற்குரியது. எத்தகைய முறையைக் கையாண்டால் ஆள்வதற்குரிய வித்தகமுடையவர் ஏற்படுவர் என்று இனி என்னைக் கேட்கலாம். இதுபற்றி உரைப்பதற் கதிகம் இல்லை. ஒருவனது ஆன்மா இருளிலிருந்து நீங்கி வெளிச்சத்தை அடையும்படி செய்யவேண்டும். வித்தகத்திற்குத் தத்துவ அறிவோடு கணிதநூற் பயிற்சியும், வானநூற் பயிற்சியும் வேண்டும். கணிதம் புத்தியின் நுட்பத்திற்கு உதவும். வானநூல் மனிதனை மண்ணினின்று உயர்த்தும் பெற்றியது. (தொடரும்)

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.



# ஜூலியஸ் ஸீஸர்

## [ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[814-வது பக்கத் தொடர்ச்சி]

### அங்கம் 5. களம் 3.

டிடினியஸ்ஸும் மஸ்ஸாலாவும்
மறுபடி வருகின்னர்.

மேஸ்ஸாலா:—மாற்றிய பரிசே இது, டிடினியஸ் (1) ஏனெனில், காஸ்ஸியஸ்ஸின் சைனியம் ஆண்டனியால் ஆயதுபோல், பெருந்தகை ப்ரூட்டஸின் பலத்தினால் ஆக்டேவியஸ் தோல்வியுற்றான் (2.)

டிடினியஸ்:—இந்தச்செய்தி காஸ்ஸியஸ்ஸிற்கு ஆறுதலளிக்கும் (3.)

மேஸ்ஸாலா:—எவ்விடத்தில் அவனை நீ விட்டு வந்தாய் ?

டிடினியஸ்:—முற்றிலும் அவலமுற்றவனாய், அவனடிமை பிண்டாரஸுடன், இக்குன்றின்மேல்...(4.)

மஸ்ஸாலா:—தரையிற் கிடக்குமிது அவனல்லனோ ?

டிடினியஸ்:—உயிருடனுருப்பார்போல் கிடக்கவில்லையே இவன். ஐயோ என் இதயமே! (5)

மஸ்ாஸலா:—அது அவனல்லனோ ?

டிடினியஸ்:—அல்லன், அவனாயிருந்தது இது (6) மஸ்ஸாலா, மற்று, காஸ்ஸியஸ்ஸோ இனி இல்லை. ஓ, சாயும்இரவியே, நின்றன் செங்கதிர்களுடின்று மாலை நீ மூழ்குமாறுபோல், தன் செங்குருதியில் காஸ்ஸியஸ்ஸின் காலம் சாய்ந்திருக்கின்றது (7). உரோமா புரியின் இரவி சாய்ந்துவிட்டது. நம்நாட்கள் முடிந்துவிட்டன. முகிலும் பனியும் இன்னல்களும் இனி வருக; நம்முடைய காரியங்கள் தீர்ந்துவிட்டன (8). என் வெற்றியை நம்பாத கவலையே இக்காரியத்தைச் செய்துவிட்டது (9).

மேஸ்ஸாலா:—நல்ல வெற்றி வாய்க்காதென்னும் அவநம்பிக்கையே இக்காரியத்தைச் செய்தது (10). ஓ பாழும்பிழையே, மாழ்கிய மதியின் மதலாய், (11). இல்லாதவைகளை ஏனோ நீ மனிதர்தம் கருத்திற்கிசைந்தபடி காட்டுகின்றனை ? (12) கருத்தினுள் மிகவிரைவிற் கருக்கொள்ளும் ஓ பிழையே, நின்னைச் சுமந்த அன்னையைக் கொல்கின்றாயன்றி இனிது நீ பிறப்பதோ எந்நாளும் நேர்வதில்லை. (13)

டிடினியஸ்:— ஏ, பிண்டாரஸ்! எங்கிருக்கின்றாய் நீ, பிண்டாரஸ் !

மேஸ்ஸாலா:—அவனைத் தேடிப்பார், டிடினியஸ்; நான் பெருந்தகை ப்ரூட்டஸைக் கண்டு அவன் செவியினுளிச் செய்தியைச் செருகச் செல்வேன். இதனைச் செருகுதலென்று யான் செப்பலாம்; ஏனெனில், ப்ரூட்டஸின் செவிகளால், இக்காட்சியின் செய்தி, தைக்கும் இரும்பும் நஞ்சுடை அம்பும் போல்இனிது ஏற்றுக்கொள்ளப்படும் (14).

டிடினியஸ்:— விரைக நீ மஸ்ஸாலா, அதற்கிடையில் நான் பிண்டாரஸ்ஸைத் தேடுகின்றேன்.

[மஸ்ஸாலா போகின்றான்.]

வீரனே, காஸ்ஸியஸ், என்னை யேன் போக்கினாய்? நின் மித்திரரை நான் தலைப்பட்டேனல்லெனோ? இவ் வெற்றிமாலையை என் நெற்றியிற் சூட்டி நினக்கதனைக் கொடுக்குமாறு விதிக்கவில்லையோ

(1) மாற்றிய பரிசு—ஒன்றினைக் கொடுத்து மற்றொன்றைப் பெறுவது.

(2) அத்திறத்தில் ஆண்டனி காஸ்ஸியஸ்ஸை வென்றான்; அதற்கு மாறாக இத்திறத்தில், ப்ரூட்டஸ் ஆக்டேவியஸ்ஸை வென்றான்—என்பது பொருள். ஆக்டேவியஸ்ஸை வென்றுவந்த ப்ரூட்டஸின் சைனியத்தைத்தான் டிடினியஸ் முன் சந்தித்தான்; அதனைத்தான், டிடினியஸ் பகைவரால் பிடிபட்டதாய்ப் பிண்டாரஸ் மயங்கிவிட, அதுகேட்டுக் காஸ்ஸியஸ் தற்கொலை புரிந்துகொண்டனன்.

(3) இச்செய்தி—ப்ரூட்டஸினால் ஆக்டேவியஸ் தோல்வியுற்றது.

(4) 'விட்டுவந்தேன்' என்று முடிப்பதன்முன், கீழே கிடக்கும் காஸ்ஸியஸ்ஸின் உடலத்தை மஸ்ஸாலா கண்டுவிடுகின்றான்.

(5) உயிரின்றிக் காஸ்ஸியஸ் கிடக்கின்றான் என்பதைக் கண்டதும் டிடினியஸ், துயரத்தால் உடைவதுபோல் துடிக்கின்ற இதயத்தவனாயினான்.

(6) உயிரில்லை ஆதலின், இனி இந்த உடலத்தைக் காஸ்ஸியஸ் என்பதற்கில்லை—முன்னே இருந்தான் காஸ்ஸியஸ், இனி இல்லை—என்பது பொருள்.

(7) தன்னின்றுபரவிய செங்கதிர்களினிடையே சூரியன் மூழ்கி மறைவது போலவே காஸ்ஸியஸ்ஸும் தன்னுடைய இரத்தத்தில் மாய்ந்து கிடக்கின்றான்—என்பது பொருள்.

(8) காஸ்ஸியஸ்ஸே இறந்தபின் இனி என்ன செய்யக்கிடக்கின்றதெனக் கையற்றநிலையனாகின்றான்.

(9) நான் பார்த்துவரச் சென்ற படை பகைப்படையாயின் அவர்களிடத்திலிருந்து தப்பி நான் வரமாட்டேன் என்னும் அவநம்பிக்கையால் காஸ்ஸியஸ் இவ்வாறு தற்கொலை புரிந்துகொண்டிருக்கவேண்டும்—என்பது பொருள்.

(10) டிடினியஸ் சொல்லியதையே மீண்டும் மஸ்ஸாலா பொதுவாக எடுத்துக் கூறுகின்றான்.

(11) வெற்றியோ வாய்த்திருக்க, தோல்வியே நேர்ந்ததாக எவ்வாறோ பிழைபட எண்ணியே காஸ்ஸியஸ் தற்கொலை புரிந்துகொண்டிருக்கவேண்டும் என்று ஊகித்து இவ்வண்ணம் பேசுகின்றான். பிண்டாரஸ் தான் பார்த்ததைப் பிழையாகப் பொருள்படுத்திக்கூறியசெய்தி இவர்களுக்குத் தெரிந்திருக்க ஏதுவில்லை.

பிழையானது இங்கு ஓர் குழந்தையாய் உருவகம்செய்யப் பெற்றிருக்கின்றது. துயரத்தால் மதிமாழ்கி அயர்கின்ற பொழுதில் பிழைபட ஒன்றினை மதிப்பது இயற்கையாகையால், பிழையை, 'மாழ்கிய மதியின் மதலாய்' என்று அழைக்கின்றான். மதலாய் - பிள்ளையே.

(12) துயரத்தால் தளர்ந்திருப்பவர், எது நேருமோ என்று அஞ்சுகின்றார்களோ அது நேராதிருந்தும், நேர்ந்துவிட்டதுபோல் பிழைபட மயங்குவானேன்—என்பது பொருள்.

(13) பிழையென்னும் இந்தச் சிசு ஒருவர் கருத்தினில் கருத்தரிக்குமாயின், அன்னையைக் கொன்றுகொண்டு பிறக்கும் குழவிபோல், அப்பிழையைக்கொண்டவன் கெடுகின்றான்—என்பது பொருள்.

அவர்? அவர்தாம் செய்த ஆரவாரத்தை நீ கேட்கவில்லையோ! ஐயகோ! அனைத்தையும் நீ அவலமாய்ப் பொருள்படுத்தினாய் (15). இரு, இரு! இந்த வாகையை நின் நெற்றியி லேற்றுக்கொள். (16) உன்னுடைய ப்ரூட்டஸ் அதனை உனக்குக் கொடுக்கச் சொல்லினான்; அவன் கட்டளையை நான் நிறைவேற்றுவேன்—ப்ரூட்டஸ், விரைந் திவண் வருக, கேயஸ் காஸ்ஸியஸ்ஸை யான் எங்ஙனம் மதித்திருந்தேன் என்பதைப் பார். தெய்வங்காள், விடைகொடுங்கள்—உரோமனுக் குரியவோர் செய்கை இது (17). காஸ்ஸியஸின் கத்தியே வருக, வந்து நீ டிடினியஸ்ஸின் இதயத்தைத் தேடிக்கொள்(18)

[சாகின்றான்]

(14) இனிது,—என்பது இங்கு, இனிமையின்றித் துன்பஞ்செய்வனவாய் ஏற்றுக்கொள்ளப்படும்—என்னும்பொருளுடையது.

(15) நிகழ்ந்தது ஒன்றாக, அந்நிகழ்ச்சிகளை நீ மாறுபடப் பொருள்படுத்தி அவலமாயினை—என்பது பொருள்.

(16) வாகை-வெற்றிமாலை. ப்ரூட்டஸ் தன் வெற்றிக் கடையாளமாகக் கொடுத்தனுப்பிய மாலையை டிடினியஸ் காஸ்ஸியஸின் சவத்தின் தலையில் சூட்டுகின்றான்.

(17) உரோமனுக்குரிய செய்கை—உற்ற நண்பனொருவன் உயிர்துறந்தபின் தான் வாழாமை.

(18) காஸ்ஸியஸ்ஸின் கத்தியையே எடுத்துத் தன் மார்பில் குத்திக்கொண்டு சாகின்றான்.

# செஞ்சிக்கோட்டையின் அழிவு

நந் தமிழ்நாட்டிற் பண்டைநாளிற் பல்வளங்களோங்கித் திகழ்ந்த நகரங்கள் பலவற்றுள்ளும் செஞ்சி நகரு மொன்றென்பதை யறியாதார் ஒருவருமிலர். அந்நகர், ஒருகால் ஜயசிங்குமன்னர் முதலியோர் ஆட்சிக்குட்பட்டு விளங்கிற்று. அதன் எல்லைக்குள் வடக்குத் தெற்காகத் தெளிந்த நீருடைய ஆறொன்று எருமையன்ன கருங்கற்கள் இடையிடையே அமையப்பெற்று அழகிய தோற்றத்தோடு பாய்கின்றது. அதனைக் கடந்து சிறிதுதூரம் செல்லின் பல கட்டடங்களைத் தங்கள் உச்சியிற் கொண்ட இரண்டு மலைகள் தோன்றுகின்றன. அம்மலைகளை நோக்கிச் செல்லும் வழியில் இடையிடையே அழகிய வீடுகளையும் பச்சைப்பசேரென்ற வயல்களையும் பார்த்துக்கொண்டே போவோமானால், பெரிதும் தூர்ந்து உடைந்த கரைகளை இருமங்கும் பெற்று, அற்பப்பிராணிகளும் அசட்டை செய்யும் ஆழமுடைத்தாய்ப் பாழே உருவெடுத்தாற் போன்றதோ ரகழியைக் காணலாம். அதனைச் சார்ந்து அகன்றுயர்ந்து அழிவுற்ற வுறுப்புக்கள் பல கொண்டு, வடக்குத் தெற்காகச் சென்று இரண்டு மலைச்சரிவுகளைச்சேர்க்கின்ற கோட்டைச்சுவரொன்று படுகாயப்பட்டும் வீரங்குன்றா வீரனே போன்று நிற்கின்றது.

அச்சுவரின் அமைந்துள்ள வாயிலைக் கடந்து உட்சென்றதும் வலப்பக்கம் இராசகிரி என்று கூறப்பெறும் ஒரு சிறு மலை, மக்கள் அதன் உச்சியை யடைதற் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள மூன்று வழிகளுடன் சற்றேறக்குறைய 370 அடி உயரமுடையதாய் விளங்குகின்றது. அம்மலையின் படிகள் யாவும் செம்மையாக அமைந்துளவேனும் பெரிதும் மனிதர் போக்கின்மையால் போவார்க்குப் பொருந் துன்பத்தை விளைக்கின்றன. உச்சியிற் சபாமண்டபமொன்று, அரசர் அமர்வதற்கு ஓரழகிய மேடையையும் நான்கு பக்கங்களில் நான்கு திண்ணைகளையும் பெற்று ஓங்கியுயர்ந்து காண்பார் மனத்தைக் கவர்கின்றது. அவ்வழகிய மண்டபத்திற்கருகில் நாற்றிசையும் அழிவுற்று இருட்டிற்கிருப்பிடமாய் ஆந்தையும் கழுகும் அழுதற்கமைந்த வீடேயாய்,கோ இன்றியுங் கோயிலெனப் பெயரளவிலிருக்கும் ஆலயமொன்றைக் காணலாம். அதன் பக்கலொரு நீர்ச்சுனை பண்டு மக்கட்குப் பெரும் பயன் அளித்து இன்று கருதுவாரின்றி யிருக்கின்றது.

ஒருபால் ஏறக்குறைய 70 அடி நீளமும் 37 அடி அகலமும் 30 அடி உயரமுமுள்ள ஒரு பெரிய கட்டடம் அங்குப்போவாரைத் தன்னிடம் வாவென்றழைப்பது போன்று உயர்ந்திருக்கின்றது. அப்பெருங் கட்டடத்திற்கு அமைந்த சுவர்கள் நான்கோடு குறுக்குச் சுவரைச்சார்ந்து அதற்குட்பக்கத்தில் மேலேறுதற் கென்று கட்டப்பட்ட சுமார் 2 அடி நீளமுள்ள படிகள் உள்ளிருப்பார்க்குத் தோன்றுதவாறு எழுப்பப்பட்ட ஐந்தாஞ் சுவரொன்று முண்டு. அச்சுவர்களுக்குமேல் வானம் கவிந்தாற் போன்ற ஒரு பெரிய வளைவுப் பதங்கு வேறுதாரின்றிப் பொருந்தி இருக்கின்றது. அக்கட்டடத்துள் பொருந்துதற்குஇரும்பும் மரமும் தவம் செய்தில. ஏறக்குறைய $2\frac{1}{2}$ அடி அகலமும் 6 அடி உயரமுமுள்ள ஒரு வாயிலும், உத்தேசம் 2 அடி அகலமும் 6 அடி உயரமுமுள்ள ஒரு படிவாயிலுமன்றி, சற்றேறக்குறைய 3 அடி அகலமும் 2 அடி உயரமுமுள்ள இரண்டு பலகணிகளும், மேற்பதங்கில் சுமார் $1\frac{3}{4}$ அடி நடு அளவுள்ள ஒரு வட்டமான துவாரமும் அக்கட்டடத்தில் காணப்படுகின்றன. அதனருகில் கவனிப்பாரின்மையால் மேற்பதங்கில் பெரும் பிளவுள்ள மேற்கூறிய அளவுள்ள கட்டடமொன்று இருக்கின்றது. அதனை ஒரு சுவர் இரண்டறைகளாகப் பிரிக்கின்றதெனினும் அது பதங்களவு உயர்த்தப்படவில்லை. அச்சுவர் அரசாங்கத்தாரால் சில வருடங்களுக்குமுன் மேற்பதங்கைத் தாங்குதற் கென்று எழுப்பப்பட்டதென்றும் அது யாதோதடையால் இடையே நிறுத்தப்பட்ட தென்றும் அந்நகர் மக்கள் கூறுகின்றார்கள். இவைகளே யன்றிச் சில சிறுகட்டடங்களும் அழிவுற்றிருக்கின்றன.

மலையை விட்டுக் கீழிறங்கிச் சிறிதுதூரம் இராணிகிரியை நோக்கிச் செல்லும் வழியில் அரசர் அந்தணர் வணிகர் வேளாளர் என நாற்பாற்பட்ட மக்கள் இருந்தற்கு இடமாய் நின்றழிந்த மாளிகைகளின் சின்னங்களைக் காணலாம். சில கஜங்களுக்கப்பால் மலைமீதேற முதலாக நுழைதற் கென்று பொருந்திய வாயில்முன் ஓர் அகழி மலையைச் சார்ந்து செல்கின்றது. அவ்வாயிலுக் கெதிரில் நன்னிலையில் ஒரு மசூதி ஜயசிங்கு மன்னர்க்குப் பின்னிருந்த மகமதியர் காலத்தில் கட்டப்பட்டு இன்றும் புதியநிலைமையி லிருக்கின்றது. ஆயினும் அது உபயோகிப்பா ரின்மையால்



வெகுசீக்கிரத்தில் அழிவுற்றுச் சிதைந்துபோய் மற்றவைகளோடு ஒன்றாகவைத்தெண்ணும் தன்மையை அடையும் என்பதற்கோர் ஐயமில்லை. அதனருகில் ஆலயமொன்று பாழ்பட்டு மனிதர் போக்கின்றி நாய்க்கும் நரிக்கும் அமைந்த வீடாய் இருக்கக்காணலாம். வாசகர்களே, அதற்கு அரணாக நாற்றிசையும் நான்கு பெருமதில்கள் உயரமும் பலமும்பெற எழுப்பப்பட்டிருக்கின்றன. ஆயிரக்கால் மண்டபமொன்று மேற்பரவியிருந்த கற்கள் பல கீழ்ச்சரிந்தும் கால்கள் பல பூமியிற் புதைந்தும் சீர்குலைந் திருக்கின்றது. அழகிய கிணறொன்று சூரியகிரணம் படாநிலைமையிலும் தெளிந்த நீருடன் அழிந்த ஆலயத்தின் அழகை அடியோடு கெட்டுப்போகாதவாறு காக்க நிற்பதுபோன்று அமைந்திருக்கக் காணலாம். மிகவும் விசாலமாகக் கட்டப்பட்ட அக்கோயில் ஒரு சமயம் நூற்றுக்கணக்கான மக்கட்கு இடம்கொடுத்து இன்று பயமற்று ஒருவன் தங்க இயலாத நிலைமையிலிருப்பது என்னே! தூண்களிலும் சுவர்களிலும் அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டில்லை எனினும் அவ்வாலயம் ஆதியில் சுத்தமான வேலைப்பாடமையக் கட்டப்பட்டதென்பதை எவரும் மறுத்தலியலாது. அதன் உள்ளும் புறமும் சுற்றிச்சுற்றிப் பார்ப்பினும் விக்கிரகம் ஒன்றைக் காண்பதரிது. அதற்கு எதிரில் ஏறக்குறைய 17 அடி உயரமும் $1\frac{3}{4}$ அடி சதுரமுமுள்ள கருங்கற் கம்பம் பல பட்டைகளுடன் விளங்குகின்றது. அதற்குக் கிழக்கில் ஒரு சிறு கட்டடமிருக்கின்றது. அதனை, ஆண்டுள்ள மக்கள் சிறைச்சாலை என்று கூறுகின்றார்கள். ஆனால் அது இப்பொழுதிருக்கும் நிலைமையால் உண்மையை அறிதற்கிடனில்லை.

இராணிகிரியின் வாயிலையடைந்து பல மதில்களைக் கடந்து உட்சென்றதும் ஒரு பெருவெளியை யடையலாம். ஆண்டுச் சற்றேறக்குறைய இருபதுக்கிருபதடி சதுரமுள்ள கலியாண மஹால் என்ற பெயர்பெற்ற ஒரு செங்கற்கட்டடம் ஏழு அடுக்குடன் புத்தம் புதியதாக விளங்குகின்றது. அதன் அமைப்பும் வேலைப்பாடும் முற்கூறப்பட்ட மசூதியை யொத்திருப்பதால் அதுவும் மகமதியர் காலத்தில் கட்டப்பட்டதாகவே இருத்தல்வேண்டும். அக்கட்டடத்தில் ஒன்றின்மே லொன்றாகப் பொருந்திய அறைகள் ஏழும் தெற்குத்திசையை நோக்கியுள்ளன. கிழக்குப் பக்கமும் மேற்குப்பக்கமு மிருக்கும் சுவர்களில் இரண்டிரண்டு வாயில்கள் இருக்கின்றன. அவ்வாயில்களுக்கமைந்த படிகளின் சூழ்ச்சியை நேரிற்கண்டே அனுபவித்தல் வேண்டும். சில அடிகளுக்கப்பால் உத்தேசம் பதினேழுக்குப் பதினேழடி சதுரமும் 6 அங்குலம் கனமுமுள்ள சுத்தமாகத் தேய்க்கப்பட்ட ஒரு கருங்கல், ஏறக்குறைய 7 அடி நீளமுள்ள சுத்தமாகத் தேய்க்கப்பட்ட குழவியைப் பக்கலில் பெற்று விளங்குகின்றது. ஆனால் அச்சதுரக்கல் பல துண்டுகளாக உடைந்த நிலையில் இப்பொழுதிருக்கின்றது. பின்னும் இராசகிரியிற் கூறிய பெரிய கட்டடத்தைப் போன்ற மூன்று கட்டடங்கள் ஒன்றாகச் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கின்றன. அந்நகர மக்கள் அக்கட்டடத்திலுள்ள மூன்று அறைகளும், முறையே நெல் கேழ்வரகு கம்பு முதலியன சேமித்து வைப்பதற்காக் கட்டப்பட்டன என்று கூறுகின்றார்கள். இவைகளே யன்றித் தொடர்ச்சியாகச் சில சிறு கட்டடங்களும் எண்ணெய் சேமித்து வைப்பதற்காகப் பூமியில் ஒரு சிறு சட்டடமும், கொட்டடி ஹால் என்கின்ற ஒரு பெரிய கட்டடமும் இருக்கின்றன.

பின்னர் ஏறக்குறைய 700 அடி உயரமுள்ள மலைமீதேறிப் பல நூற்றுக் கணக்கான படிகளையும் ஓரிருப்புப் பாலத்தையும் கடந்து மேற் சென்றால், மலையின் உச்சியை அடையலாம். மலைமீது சரிவான பாகங்களில் பகைவர் எளிதாக மேலேறுவண்ணம் பல சுவர்களெழுப்பப்பட்டிருக்கின்றன. ஆண்டு இராசகிரியின் கட்டடங்களைப் போன்ற மூன்று கட்டடங்கள் வெவ்வேறிடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் அவைகளில் ஒன்று பல * தூண்களையும் ஓ ரிரும்புக்கதவினையும் பெற்று அழகாக விளங்குகின்றது. அவ்விரும்புக்கதவு சில வருடங்களுக்குமுன் அரசாங்கத்தாரால் அக்கட்டடம் பழுதுபார்க்கப்பட்ட பொழுது அமைக்கப்பட்ட தென்று அங்கிருப்பவர்கள் கூறுகின்றார்கள். மற்றொரு கட்டடம் இடிந்தழிந்து பாழாய்க் கிடக்கின்றது. வேறொன்று இன்னும் வசித்தற்கு யோக்கிய மாயிருக்கின்றது. பின்னும் சுமார் $10\frac{1}{2}$ அடி நீளமுள்ள ஒரு பீரங்கியும் செங்கற்களால் கட்டப்பட்ட ஒரு மணிக்கூண்டும் [illegible]ழ்பட்ட ஒரு கோயிலும் சில கட்டடங்களும் நீருள்ள மூன்று சுனைகளும் காணப்படுகின்றன. அம்மூன்று சுனைகளில் ஒன்றிலுள்ள நீர் குடித்தற்குத் தகுதியுடையதாய் இருக்கின்றது. ஒரு பள்ளத்தில் சுமார் 60 அடி நீளமும் 30 அடி அகலமுமுள்ள ஒரு செங்கற் கட்டடம் உட்சென்று பார்க்க இயலாத நிலைமையில் இருக்கின்றது.

வாசகர்களே, தென்னாட்டின் அழகையும் பண்டைச் சிறப்பையும் தெளிவாக விளக்கும் கருவிகளில் பாழடைந்துள்ள செஞ்சி நகரும் ஒன்று. ஆதலின் தமிழரும் பிறரும் இதன் பண்டைச் சிறப்பியல்களையும் இன்றுள்ள நிலைமையினையும் நேரிற் கண்டுணரல் வேண்டு மென்பதே இக்கட்டுரையின் நோக்கம். கற்றோர்க்கும் மற்றோர்க்கும் கண்ணுக்கும் மனத்திற்கும் விருந்தளிக்கும் செஞ்சிக் கோட்டையைக் காணாது கழியும் வாழ்க்கை தென்னாட்டிற் பிறந்தும் அந்நாட்டின் பயன் நுகர்ந்தறியா வாழ்க்கையேயாகும் என்பது திண்ணம்.

* கற்களால் சதுரமாகக் கட்டப்பட்ட கட்டைகள்

# பொதிகை நிகண்டு

[836-வது பக்கத் தொடர்ச்சி]

## பத்தாவது

### ஒருசொற் பல்பொருட் பெயர்த்தொகுதி

#### ககர வெதுகை

அகரமெழுத் தூராகு மகம்வேள்வி நாளா
மகமிடமுண் மனம்பாவ மனைமரங்கள் விலையாஞ்
சிகரமலை முடிகவரி மதிழ்தலைவெற் பலையாஞ்
சிகழிகைவா சிகைமாலை மயிர்முடிமுப் பெயராந்
தகர்விலங்கி ஞனுடைத லாடெனமுப் பெயராஞ்
சகம்பூமி யாடிரண்டா நகந்தருவெற் புகிராம்
புகர்வெள்ளி நிகர்மாசா மொகரமயி லெழுத்தாம் [ரே.
பொருட்டேகன் னிகைசேற்றிற் குமிழ்வெற்பாய்ப் பக

பகங்கொக்குக் கான்கோழி பகுப்புடன்பெண் குறியாம்
பகலொளிதி வாமுகிழத்த நடுச்சுடர்நாட் பகுப்பா
முகந்திசைவத் திரமாகு நுகநுகக்கோ லலமா
முகடுவெரின் முகடுயர்வாம் பகர்தல்விற்றல் சொல்லா
மிதம்புவியிம் மையுமிருபே ருகநுகம்பார் யுகமா
மிகவசைச்சொ லகறலும்பே ரகியரவோ டிரும்பாம்
ககங்கணைபுட் பொதுப்பெயரா மகிழ்வகுள மகிழ்வாங்
ககனங்கான் படைவிசும்பென் றெருமூன்றும் விகற்பே

விகடமுயர் விகிர்தமுமாந் தகடிலையை மையுமா
மிகைகுற்ற மிகன்மேடா நகைநகைதே சுவப்பாம்
பகடுபுனை பெருமைகரி யேறெருது கிடாவாம்
பகவனே தெய்வமு மும்மூர்த்திகளு மாகு
மகடுவயின் புறநடுநீ டுதலுள்ளோ டைம்பே
ரகவலா சிரியமயிற் குரல்கூத்தென் றுருகுஞ்
சகடமுரு ளூர்க்குருவி ரோகிணியோ கமுமாந்
தகைபெருமை யழகன்பு தடைபண்பா மகனே. 3.

மகரமிற சுறுக்கொங்காஞ் சுகமின்பங் கிளியாம்
மகர நதங்கள்ளுத் தேன் மலர்த்தாது முப்பேர்
இகல்பகைபோர் வலிநிகராஞ் சிகைகுடுமி கழுகா
மெஃகுருக்கு வேலாழி படைக்கலன்கூர் மையுமாம்
புகல்குதிர்சொல் லுடல்கெதிபக் குவம்அடல்புக் கலுமாம்
புகைபுகையோ சனையாகுந் திகைசுணங்கு திசையாஞ்
சிகரிவெற்பு நாரையெலி கோபுரநாற் பேராந்
திகிரிமலை வேயாழி வண்டில்வட்ட நிகழ்த்தே. 4.

நிகழ்நிகழ்ச்சி யொளியாகு மகணிவய லுள்ளாம்
ஞெகிழிசிலம் பனலின்பே ரியன்ற கொள்ளியுமா
மிகுளைசுற்றந் தோழிநட்பா மகலகற்சி விளக்கா
மிகுத்தல்விளி வீர்தல்கொலை வீழ்த்தலிழைத் தலுமாஞ்
சகலமுற்றுந் துண்டமுமா மகலமுரம் விரிவாஞ்
சகுந்தமே கழுகுபுள்ளின் பொதுப்பூக முப்பேர்
சிஞமயில்நா புரங்கேதுத் தீயெனநாற் பேராஞ்
சிகண்டிமயில் பாலையாழ்த்திறமுமாஞ் சகத்தே. 5.

சகுனிநிமித் திகன்புள்ளா மகன்சுதனிந் திரனுஞ்
சகுனமே பறவைகிழங் கொடுநிமித்த மூன்று
மெகினமே புளிகவரி நாயன்ன மாவா
மிகலனரி பகைஞனுமாந் துகள்பொடிமா சிரண்டா
மகலுள்பரப் பூரகல நாடெனநாற் பேரா
மகைத்தல்வே தனையொடித்த லறுத்தலழித் தலுமா
முகரிபொன்னே ராருகுஞ் சகிதோழி பொறையா
முகைதிரள்பூ மொட்டுமிடா மூன்றெனவா கினவே. 6.

ஆகுவே மூடிகஞ்சாய் மறையெலிமுப் பேரா
மாகமார் புடலாகும் போகில்புட்பூ மொட்டாம்
பாகுபா கன்குழம்பு பாக்குப்பால் பகுப்பாம்
பாகலே காரவல்லி யோடுபலா மரமாம்
வாகுதோ ளழகாகும் பாகமையம் பகுப்பாம்
வாகைமரஞ் செயம்பண்பாஞ் சேகுகாழ் விதையாஞ்
சாகம்வண்டு தேக்காடு சிறுகீரை தாஞுஞ்
சாகரஞ்சிந் துறங்காமை யாமிசைக்கோ கிலமே. 7.

கோகிலம்பல் விகள்குயிலா நாகிளமை சங்காங்
கூகையோர் செடிபுள்ளாம் பூகமுண்டன் கமுகாம்
போகிபாம் பிந்திரனும் போகல்நெடில் போக்காம்
போகமே பாம்புடலும் போகவிகற் பமுமாம்
யூகமே குரங்குபடை யுணர்ச்சிதற்க மூவப்பாம்
யோகம்பா வினைகூட்ட முயர்ச்சியுபா யமுமாந்
தோகைமயில் மயிற்பீலி விலங்கிளுண் பெண்ணுஞ்
சோகமய லொடுதிரளா நாகரிக மாதே. 8.

நாகமலை கரிபுன்னை குரங்குவிசும் பரவு
நல்லாடை காரீயஞ் சுவர்க்கமொன்பான் பேராஞ்
சீகரநீர்த் திரைகரகந் திவலைசாய் மறையாஞ்
சேகாமா மரமகுடந் தலைவேர்கூட் டமுமா
மீகையின்டை கொடைபொன்னு மாகுலநோ யொலியா
மேகமே தனிமையொன்றும் காகுளியார்ப் பணையாங்
கேகயமோர் பண்கமல மயிலசுண நாடாங்
கிண்டுநா கரஞ்செழுகஞ் சுக்கோரக் காமே. 9.

அக்கென்பு சங்குமணி விடைமுரிப்பு மனவா
மக்கம்விழி மனவிரண்டாஞ் சொக்கழகு மயலா
மிக்கென்ப கரும்புகள்ளாஞ் சுக்கைதா ருவொ [மூஞ்
மெக்கல்குவிந் திடல்சொரிவா மொக்குள்குமிழ் முகி
செக்கென்ப தொருநாளுஞ் செக்குமிரு பேராஞ்
சிக்கஞ்சீப் புறிசிகையாந் திக்குவிழி திசையாங்
கொக்கென்ப பகஞ்செந்நாய் பரிமூல மாவாங் [ணையே 10.
குக்கில்செம்போத் தொருமருந்தென் றிருபேர்வக்க

வக்கிரமே மடங்கல்வட்டங் கொடுமைபொறு மையுமாம்
மக்கள்சிறுர் மானிடரா நக்கலுண்டல் சொரிவாஞ்
சக்கரமே மலைவண்டில் பெருமைவட்ட மாழி
தரைபிறப்புக் கடவோர்பு ளொன்பதுபே ராகும்
பக்கமே சிறகுநட்புத் திதியருகு நாற்பெர்
பக்கணமூண் வீதியுமாந் தெக்கணந்தெக் குரனுஞ்
சக்கிரிமா லரவிறைவன் மட்பகைசெக் காஞுஞ்
சார்ந்தநக்க னிருவாணி சிவனிருபே ராக்கே. 11.

ஆக்கமலர் மகள்திருவாம் பூக்கமூர் கமுகாம்
அக்காரம் புடவைவெல்ல மெனவிரண்டு பேரா
மூக்கமே யுற்சாக முயற்சிவலி யொலிவோ
டுள்ளத்தின் மிகுதியென வைந்துபே ராகும்
மேக்குமேற் றிசைமேலாம் பாக்கிடைச்சொல் பாக்காம்
வியக்கிடுகைக் கிளைபிசையு மொருதலைக்கா மழுமாஞ்
சேக்கைமுலை யுறங்கிடமா நோக்கழகு விழியாஞ்
செழுந்தூக்கா ராய்வுநடங் கவிநிறையங் கமுமே. 12.

ககரவெதுகை முற்றும்.

---



#### ஙகரவெதுகை

அங்கமுட லாறங்க மெலும்புகட்டி லுறுப்பாம்
அங்கிசட்டை நாளெரியாம் பங்கிகஞ்சா மயிராஞ்
சங்கம்வெற்றி சுகங்கணைக்கால் புலவர்சங்கெண் சவையாஞ்
சங்குபடை வளைசங்காங் கங்குதினை பருந்தாம்
புங்கமம்புக் குதையம்பு புடவையுயர்ச் சியுமாம் [பாம்
பொங்கர்மரக் கொம்பிலவாம் பொங்கல்மிகை கொதிப்
வங்கம்வெள்ளி யீயம்வழு துணைபுணையோர் நாடா
மங்குலிருள் கார்விசும்பாம் பொன்பொருமங் கனையே.

அங்கதந்தோ ளணிபாம்பு வசைச்சொல்லென் றுகு
மங்கணமோர் பாலமுற்றஞ் சலதாரை சேரு
மிங்கிதமே நயங்குறிப்பாஞ் சங்கையைய மதிப்பா
மிங்கிவண்கா யமுமாகுஞ் சங்கரன்மால் சிவனுந்
திங்கள்மதி மாதமதாம் பிங்கலம்பொன் பசப்பாஞ்
சிங்களமே முசநாடாங் கொங்கைகொப்பு முலையாம்
பங்கசற்றா சொடுபெழுது சேறுபின்ன நான்காம்
பங்குமுடம் பாதிபக்கஞ் சனியாகும் பாங்கே. 14.

பாங்குபக்கஞ் சகியழகாம் வாங்கல்கொள்ளல் வளைவாம்
பங்கயம்பார் தாமரையாஞ் சிங்கல்குன்றல் மெலிவா
மோங்கல்வெற்புத் தலைவன்மே டுயர்வோங்கல் வேயா
மூரைதூங்கல் சொம்பானை துயில்நடந் தராசா
ஞாங்கர்வேல் பக்கமுன்பு மேலெனநான் காகு
நல்லாங்கவ் விடநிகராங் காங்குசுரங் கறுப்பாம்
வேங்கைபுலி பொன்கணியா மூங்கில்வேய் நாளாம்
விளம்பிகாங் கேயன்வீட் டுமன்குகனென் றசையே.

ஙகரவெதுகை முற்றும்

---

#### சகரவெதுகை

அசிசிரிப்பா யுதம் வாளாஞ் சுசிசுத்தங் கனலா
மாசுவிரை வாசகவி கவசமற்பர் தீதாம்
பிசியுணவு பொய்யாகு மசலைபுவி யுமையாம்
பிசினனே பொய்யனுலோ பன்கோளன் முப்பேர்
வசிகூர்மை வசியம்வா ளேவலும்வீ தியுமா
மாசுகுற்றஞ் சிறுமைமழை யழுக்கெனநாற் பேராஞ்
சசிமதிகற் பூரமிந்தி ராணியென மூன்றாந்
தாசிநா ளடிமையும்வே சையுமாம்பார் மிசையே. 16.

மிசையுணவு மேடாகும் பசிபசப்புப் பசியாம்
வீசலெறிந் திடலீவா மூசலுஞ்சல் சளிப்பாம்
அசனமுணு வேங்கையுமா நிசிபொன்மஞ்ச ளிரவா
மாசினி பலாவயிர மாவுரிவிண் சிறப்பா
முசலிபல பத்திரனு முடும்புதா ழையுமா
மூசல்சா மொய்த்திடலாம் பாசுவேய் பசப்பாம்
இசையொலிசொற் புகழ்பாட்டா மசுணமயில் புள்ளா
மெச்சமகங் குறைசேயா மிச்சைமிடி வசையே. 17.

வசதியூர் வீடிதமாங் கசிவிரக்கங் கசிவாம்
வாசிமிருப் பிடமணம்புட் சிறகுசீ லையுமாம்
அசனியிடி யுண்பான்வச் சிரப்படைமுப் பெயராம்
ஆசைதிசை யன்புபொன்னு மாசகங்காற் றம்பாம்
பிசிதநீ ரிறைச்சியுதா ரணம்வேப்ப மரமாம்
பிச்சமயிர் குடையின்பே ருச்சியுச்சி முடியாம்
விசையம்வெற்றி சூரியமண் டலங்கிரிசற் கரையாம்
விச்சைவிதை கல்வியதாங் கொச்சைதக ரசடே. 18.

அசந்தகருங் குதிரையுமூ வாட்டைநெல்லு மாகும்
அச்சமே பயந்தகடஞ் சலியகத்தி நாற்பேர்
வசந்தமண மிந்திரன்மா ளிகைதென்றல் முப்பேர்
வாசிவளங் குதிரைதெற்குக் குழலோசை நாற்பேர்
விசும்புபொன்னு லோகமுகில் விண்ணுடனே திசையாம்
விசைதுரியம் பொறியாகுங் குசைநாணல் சுவலாங்
குசந்தனஞ்சம் பிரந்தொட்டி தசம்புமிடாக் குடமாங்
கோசிகமோர் மறையாடை யென்பர்தே சிகரே. 19.

தேசிகன்றே சாந்திரி யாசான்வணிகன் முப்பேர்
தேசிகம்பொன் காந்தியழ கோர்திசைச்சொல் கூத்தாங்
கேசரமே மகிழ்மரமும் பூந்தாது மாகுங்
கேசமே மயிர் கவுளாங் கீசகம்வேய் குரங்காங்
காசைகுசை யஞ்சனியாங் காசுமணி மறுவாங்
கச்சையே தழும்புகவ சங்கயிறு மூன்றும்
பாசமுறை யன்பூசித் துளைபேய்பார் கயிறும்
பாசியணி நாய்வருணன் சடைச்சிபற்றுப் பாசே. 20.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்



| டானிக்குகள் : | |
|---|---|
| பாதாமி லேகியம் | ரூ. 3-0-0 |
| ரதிவல்லப லேகியம் | 2-0-0 |
| மஹா திராக்ஷாதி லேகியம் | 2-0-0 |
| குழந்தைகளுக்கு | |
| ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை | 0-4-0 |
| பால சஞ்சீவினி | 0-4-0 |
| பால ஸுதா (டானிக்) | 1-0-0 |

| தைலங்கள்: | | |
|---|---|---|
| சந்தனாதி | 6 அவுன்ஸ் | ரூ. 1-0-0 |
| அமிர்தாமலக | ,, | 0-12-0 |
| பிருங்காமலக | ,, | 0-12-0 |
| ஸ்திரீகளுக்கு | | |
| ஸுதக டானிக் | | 2-0-0 |
| கர்ப்பாசய டானிக் | | 2-0-0 |
| ப்ரஸவ லேகியம் | | 1-8-0 |

I.D.L.ச்யாவனப்ராச I.D.L.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. 61, மெடிகேடட்-டப்பி

I.D.L. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்டாலகஸ்
ஜவரேக்

[பல்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [... டன் ஆர்டர் செய்யவும்.]

## கலா நிலயச் சொல்லூடாட்டம் 11.



இடம்—வலம்
1. புனைந்துரை.
3. குபேரன்.
6. சந்திரனொளி.
7. பாதம்.
8. முதலை.
9. இந்திரஜித்துயாகம் செய்த இடம்.
12. குதிரை.
13. பிள்ளை பெறுதவள்.
14. ஆராதனை.
15. இருக்கின்றது.
16. நீக்கு.
18. வெற்றிலை.
20. கொடு.
21. பூமாலை.
22. கட்டளை இட.
23. காசியபன் மனைவி.
25. சிரித்த.
27. மேல்.
29. விரும்பி.
30. கஷ்டம்.
32. அதிகமும் குறைவு மில்லாத நேரான அளவு.
33. சிதம்பரம்.
34. மனைவியுடன் பிறந்தவன்.

மேல்—கீழ்
1. நம் பத்திரிகை.
2. வார்த்தை.
3. கோல்.
4. சொல்ல.
5. தமிழர்.
7. திரிந்து.
10. பருகு.
11. நவரத்தினத்தில் ஒன்று.
12. அணிதல்.
15. காய வை.
17. பகுபத உறுப்பு.
18. சிரசு.
19. துகிற்கொடி.
20. ஒரு திதி.
24. மீளு.
25. சொல்லு.
26. குணம்.
28. பாரதம் இயற்றிய ஓர் முனி.
29. எருமை.
31. ஓர் நரகம்.

**கடைசிநாள் :—1932 வருடம், டிசம்பர் மாதம், 5 தேதி.**

பரிசு:—கலாநிலயம், 1928, 1930, 1931 ஆகிய இவ்வருடங்களின் யாதாவது ஒன்றன் ஆப் லெதர் - கில்ட் பைண்ட் புத்தகம் ஒன்று; அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் ஒரு வருடத்திற்கு நம் பத்திரிகையை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

1. இந்தக் கட்டங்கள் மாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதி யனுப்பவும்.

2. அவ்வாறு அனுப்புபவர், அதனோடு நாலணாவுக்குக் காலணாத் தபால் தலைகள் (பதினாறு) அனுப்புதல் வேண்டும். இலங்கை வாசிகள் அவ்வூர்த் தபால் தலை 25 சதம் அனுப்பலாம். மலேயா தேசத்தவர் எட்டணா பெறுமான போஸ்டல் ஆர்டர்கள் அனுப்புதல் வேண்டும்.

3. பிழையற நேரிய விடைகள் அனுப்பியவர்களுடைய பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப் போட்டு யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்கு மட்டுமே பரிசு அளிக்கப்படும்.

4. இவ்வண்ணம் அவ்வவ் முறை பரிசு பெற்றவர்கள் தவிர, நேரிய விடைகள் ஆறு சொல்லூடாட்டங்களுக்குத் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்கள் பெயர்களை யெல்லாம் மற்றுமோர் முறை சீட்டுக் குலுக்கிப் போட்டு அதனில் பெயர் வருகிற ஒருவருக்கும், மேல் குறித்த வருடங்களின் யாதாவது ஒன்றன் தொகுதி இதழ்கள் பைண்ட் செய்யாமல் பரிசாக அளிக்கப்படும். இதுகாறும் நேரியவிடைகள் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்களும் இப் பரிசிற்கு உரியவராவார்.

5. சொல்லூடாட்டங்களைப் பற்றிய எல்லா விடயங்களிலும் மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது. இவைகளைப்பற்றி எவ்விதக் கேள்வியும் எழுதலாகாது.

6. இந்தப் போட்டியில் நம் சந்தாதாரர்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

விடைகளை **மானேஜர், கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை.** என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

---

## சொல்லூடாட்டம் நம்பர் 9. விடையும் முடிவும்.

நேரான விடை :—

இடம்—வலம்:—1. உப்பு; 3. சாக; 6. சாண்; 7. தருமராசன் அல்லது தர்மராசன்; 9. மடிதல்; 11. கவிதை; 13. தும்பி; 15. திமிர்; 17. யமன்; 18. கைத்தல்; 20. மகார்; 23. தாழை; 24. மதில்; 25. யாதார்த்தன்; 28. வாசி; 30. கிழி; 31. துலை; 32. பொய்கை.

மேல்—கீழ்:—1. உண்டி; 2. புதல்வி; 3. சாமம்; 4. கரா; 5. கான்; 6. சாமந்தி; 8. சவம்; 10. தகர்த்தார்; 12. தையல்; 13. துன்மதி; 14. பிடர்; 16. மிகை; 19. தழைத்து; 21. கால்வாய்; 22. நாயகி; 24. அரசன்; 26. தாழி; 27. தலை; 29. சிகை.

நேரியவிடை யனுப்பியவர்:—K. அல்லாபிச்சை, கோம்பை. S. T. பொன்னம்பலநாத முதலியார், ஸ்ரீவைகுண்டம். சி. கந்தையா, மன்னார். R. தியாகராஜன், காயாமொழி. S. நல்லையா, வேளானை. S. N. இராமஸ்வாமி ஐயங்கார், சங்கரிதுர்க்கம். S. சந்தான கோபால ஐயர், கண்டாச்சிபுரம். K. மழவராயன், சிந்துபூந்துறை. U. N. காளிமருதப் பிள்ளை, மேட்டூர். K. வேலுப் பிள்ளை, பேராதனை. M. கங்கேசு, கெட்டா. K. நாராயண ரெட்டிகாரு, மளிகைமேடு. M. முத்துராமலிங்கம், தக்காலா. S. நடராஜன், தக்காலா. V. இராமசாமி பிள்ளை, மோல்மின். R. திருமலை ஜக்கையா, கோம்பை. A. சுருளியாண்டி, கோம்பை. A. T. சுப்பையா, தக்காலா. V. சரவண முத்து, மன்னார். K. ஆறுமுகம், மேக்பீன். U. N. இராமசுவாமி நாயுடு, உடுமலைப்பேட்டை. A. வெங்கடரங்கன், உடுமலைப்பேட்டை. U. V. இராஜலக்ஷ்மி, உடுமலைப்பேட்டை. S. M. எசோதையம்மாள், உடுமலைப்பேட்டை. U. S. நாராயண ஐயர், உடுமலைப்பேட்டை. S. M. சொக்கலிங்கம், கொழும்பு. G. P. இராமச்சந்திரன், சென்னை. A. P. L. ஷண்முகம் செட்டியார், வேகுப்பட்டி. A. கனகசபைப் பிள்ளை, நாஹுஓயா. A. இராமுப் பிள்ளை, கொழும்பு.

பரிசு பெற்றவர் :— S. M. எசோதையம்மாள், உடுமலைப்பேட்டை.



சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

**— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —**

**தமிழகராதி ஆதார நூற்றொகுதி**
**நாம தீப நிகண்டு.**

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.
விலை ரூபா **2-0-0**

**அரும்பொருள் விளக்க நிகண்டு.**

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

**கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.**

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா **0-6-0**

**திருக்குறள்**
**மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்**
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு **0-12-0**

**களவியற் காரிகை.**

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

**நூற்பொருட் குறிப்பு.**

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட்குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

**இராஜசுந்தரம்.**

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா **0-8-0**

**தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா**

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L.,
விலை அணு **0-6-0**

**கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.**

**ANCIENT JAFFNA**
MUDALIAR C. RASANAYAGAM C.C.S.
An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European Professor. S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.
**PRICE Rs. 5-8-0.**
***KALANILAYAM***
PURASAWALKAM :: VEPERY, MADRAS.

**ஏமாங்கதத் திளவரசன்**
ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
**செந்தமிழ்க்காதை.**
கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

# கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடக மொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

**களவியற் காரிகை:**—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுறைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். ஏழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

# வர்த்தமானம்

ஜர்மனியின் முன்னேற்றம்:—அரசனை யகற்றி விட்டுக் குடியரசுப் பேறுபெற்ற ஜெர்மனியில் 60 லட்சம்பேர் வேலையில்லாமல் வருந்துகின்றனர் என்றோர் அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

வட்டமேஜை மஹாநாடு:—லண்டனில் கூடவிருக்கும் 3-வது வட்டமேஜை மஹாநாட்டிற்கு ஸர். A. P. பாத்ரோ, திவான்பகதூர் A. ராமஸாமி முதலியார், போபிலி ராஜா ஆகிய மூவரும் சென்னை ராஜதானியின் பிரதிநிதிகளாக நியமிக்கப்பெற்றிருக்கின்றனர்.

***

விதவைச் சட்டம்:—புருஷனை இழந்த ஒரு விதவை இரண்டாவது கலியாணம் செய்துகொண்ட பின்னரும் முதல்கணவன் சொத்தில் உரிமை பெறுவதற்குரிய சட்டம் ஒன்று நைஸாம்ராஜ்பத்தில் செய்யப்பெற்றுளது. விதவாவிவாகம் நாட்டில் எளிபதாவதற்காகவே இச்சட்டம் செய்யப்பட்டுளதாம்.

***

தீண்டாமை விலக்கு சட்டம்:—தீண்டாதார் எனப்படுவோர்க்கும் மற்ற இந்துக்கள்போல் தேவாலயங்களில் பிரவேசிக்கக்கூடிய உரிமை தரக்கூடிய சட்டம் ஒன்று சீக்கிரத்தில் செய்யப்படவேண்டுமென்று டாக்டர் சுப்பராயன் அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் கொண்டுவருவார் என்று தெரிகின்றது. இச்சட்டம் தீண்டாமையை அகற்றும் நோக்க முடையதாகும். அரசாங்கத்தார் இவ்விஷயத்தில் தலையிடாமல் நடுநிலை வகிப்பார்கள். ஜனப்பிரதிநிதிகளின் முடிவு அரசாங்கத்தாரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

***

மலையாளத்தில் கிறிஸ்துவ மதம்:—தென்னிந்தியாவில் மற்றெந்த இடத்தைக்காட்டிலும் மலையாளத்தில் கிறிஸ்துவ மதம் எளிய வகுப்பினரிடை வேகமாகப் பரவிவருகின்றது என்றும், சென்ற 10 வருடங்களாக நாள் ஒன்றிற்கு 28 பேர் வீதம் ஞானஸ்நானம் பெற்றுவருகின்றனர் என்று ஒரு கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது.

***

இங்கிலாந்தில் ஜாதி வேற்றுமை:—வங்காளத்தில் ரெயிப்பூர் என்னுமிடத்தில், தீண்டாமைவிலக்கு மஹாநாடு ஒன்று சென்றவாரம் நடைபெற்றது. இங்கிலாந்திலுள்ள இந்தியசங்க நிர்வாக உத்தியோகஸ்தர்களில் ஒருவரான ஸ்ரீமதி வில்கின்ஸன் என்பார் இக்கூட்டத்திற்கு வந்திருந்தார். அப்பொழுது அவர், "தீண்டாமையும், ஜாதி வேற்றுமையும் இந்தியாவிற்றான் இருப்பதாக எண்ண வேண்டாம். ஜாதி என்ற பெயரொன்று அங்கு இல்லையேயல்லால், அதற்குரிய எல்லாத் தீமையும் இங்கிலாந்திலும் இருக்கின்றது. காந்தியடிகள் இங்கிலாந்து வந்து சிறிதுகாலந் தங்கி அங்கிருக்கும் தீண்டாமை ஜாதிவேற்றுமை அனைய தீமைகளை விலக்கி இங்கிலாந்தைச் சீர்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்." என்றுகூறினராம்.

***

செவிடர் தொகை:—இங்கிலாந்தில் மாந்தர் சீக்கிரத்தில் செவிடராய் விடுகின்றனராம். சுகாதார இலாக்காவினர் எடுத்தவொரு கணக்கின்படி இப்பொழுது இங்கிலாந்தில் 80 லட்சம் செவிடர்கள் இருக்கின்றனர் என்று தெரிகின்றது.

***

அநாதையர் விடுதி:—வீடு வசதிகள் ஒன்றுமில்லாமல் தெருக்களில் வசிக்கும் அநாதையர் இரவில் படுப்பதற்கு இடமில்லாமல் கஷ்டப்பட நேர்கின்றதை உன்னி, கொழும்பு முனிசிபாலிட்டியார் அநாதை விடுதி ஒன்றைக் கட்டவேண்டுமென்று முடிவுசெய்திருக்கின்றனர் என்றும், சீக்கிரத்தில் அவ்விடுதிகட்டி முடிக்கப்பெறும் என்றும் தெரிகின்றது.

***

20 கோடிப்பொன் செலவில் ஓர் அணை:—எகிப்தில் ஓடுகின்ற நைல் நதி பாய்ச்சல்வசதிக்குரியதாயிராததினால், அதிகமான நிலப்பரப்பு சாகுபடியில்லாமலிருக்கின்றதென்றும், நைல் நதியில் ஒரு அணை கட்டி நீர்ப்பாசன வசதியுண்டாக்கினால் விவசாய அபிவிர்த்தி ஏற்படும் என்றும் எண்ணி எகிப்து அரசாங்கத்தார் ஒரு அணை கட்டத் தீர்மானித்திருக்கின்றனராம். அணைகட்டும் நிபுணர்கள் இந்த அணையைக் கட்டி முடிக்க 20 கோடிப் பொன்னும், 20 வருடகாலமும் பிடிக்குமென்று அபிப்பிராயப் படுகின்றார்களாம்.

***

ருஷியாவின் முன்னேற்ற முயற்சி:—ருஷியாவில் இன்னும் சில சிறிய மாதாகோயில்களும், ஜபமண்டபங்களும் இருக்கின்றனவாம். இன்னும் 20 லட்சம் காதலிக் கிறிஸ்துவர்கள் இருக்கின்றனராம். ருஷிய அரசாங்கத்தார் 1932-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ந் தேதியோடு, எஞ்சியிருக்கின்ற மாதாகோயில்களும் ஜபமண்டபங்களும் அகற்றப்பட வேண்டுமென்றும், இக்காரியம் நடைபெறுவதற்குக் கம்யூனிஸ்டு ஸ்தாபனங்கள் வேண்டியன செய்யவேண்டுமென்றும் அறிக்கை விடுத்திருப்பதாக வத்திகான் என்னுமிடத்தில் பிரசுரமாகும் 'அப்சர்வர் தோரோமானு' என்னும் பத்திரிகையில் ஒரு செய்திகாணப்படுகின்றதென்று அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது. மக்களை இன்னும் சிறிது முன்னேற்றிவைக்கும் பொருட்டுச் சோவியத் அரசாங்கத்தார் முயலும் புதிய முயற்சி இது.

***

சம்பளக் குறைவு அகற்றப்படும்:—பொருளாதார நெருக்கடியை உத்தேசித்து, அரசாங்க உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தில் ஏற்பட்ட குறைவு 1933-ம் ஆண்டிலிருந்து அகற்றப்படும் என்றும், எல்லோரும் 1933வருடத்திலிருந்து பழைய சம்பளத்தைப் பெறுவார்கள் என்றும் தெரிகின்றது.

***

ஜாமீன்தொகை பறிமுதல்:-பம்பாயில் நடந்துவரும் 'பிரீபிரஸ்' என்னும் பத்திரிகையினிடமிருந்து அச்சுச் சட்டத்தின்படி அரசாங்கத்தார் வாங்கியிருந்த ஜாமின் தொகை ரூ 10 ஆயிரம் சென்றவாரம் பறிமுதல் செய்யப்பட்டது. இதற்கு முன் அப்பத்திரிகையினிடமிருந்து 6000 ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது. எனினும் இப்பத்திரி[illegible]ன்றதென்று தெரிகின்றது.

KALANILAYAM
Reg. No. M. 2324.


# — கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு
முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

| | | | | |
|---|---|---|---|---|
| பால காண்டம் ... ... ... ... | ரூ. | [illegible] | 0 | 0 |
| அயோத்தியா காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| ஆரணிய காண்டம் ... ... ... ... | ,, | 4 | 0 | 0 |
| கிட்கிந்தா காண்டம் ... ... ... ... | ,, | 4 | 8 | 0 |
| சுந்தர காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| யுத்த காண்டம்—2 பாகம் ... ... ... ... | ,, | 10 | 0 | 0 |

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— **கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.**

## :: அமிர்த சாகரம் ::

தேக பலத்தையும், ஞாபகவிருத்தியையும், பும்ஸத்வத்தையும், கொடுப்பதில் எங்கள்
அமிர்தார்ணவ லேகியம்
அமிர்தசாகரம் போன்றது. மேலும், நீடித்த தலைவலி, மண்டை இடி, மார்பு வலி, தேகச் சூடு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும். 20-தோலா லேகியம் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2.

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!
கேட்போருக்கு இனுமாகவும், தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

## கற்பக மலர் (சிறு கதைகள்)

(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)
மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணு 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணு 3.
ஏழணு ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

## பாரத வசனம்.

ஆதிபர்வம் 3-8-0. ஸபா, ஆரண்ய, விராட பர்வங்கள் அடங்கியது ரூபா 5-0-0. உத்தியோக, பீஷ்ம, துரோண, கர்ண சல்லிய, ஸவுப்திக பர்வங்கள் அடங்கியது 5-0-0. சாந்தி, அநுசாசனிக, அச்வமேத, ஆச்ரமவாஸ, ஸ்வர்க்காரோஹண, முசல, மஹாப்ரஸ்தானிக பர்வங்கள் அடங்கியது 5-0-0.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

## NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

**Head Office :**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

| | |
|---|---|
| New Policies Issued in 1931 for over ... ... | Rs. 1,32,33,000 |
| Showing an increase over the New Business figure for 1930 of ... ... | 16.54 % |
| Claims paid up to end of 1931 over ... ... | Rs. 90,00,000 |
| Invested Funds amount to over | Rs. 1,75,00,000 |

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

## FIRE & ACCIDENT RISKS
**covered by**
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*


**Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)**